www.padippakam.com



# சுதந்திர வீரர்

“ஈழநாதம்” வானோசை - சுவிஸ்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திர வீரர்

## 1

"ஈழநாதம்" வானோசை - சுவிஸ்

படிப்பகம்

www.padippakam.com


| | |
|---|---|
| **title:** | **suthanthira veerar** |
| **first edition:** | **november 1998** |
| **publishers:** | **eelanatham radio**<br>**p.o box 2257**<br>**8031 zürich**<br>**switzerland** |
| **artist:** | **t.s.bose** |


படிப்பகம்

www.padippakam.com

வணக்கம் !
உள்ளே வாருங்கள்.
அதற்குமுன்
உங்களை இங்கே
ஆற்றுப்படுத்துங்கள்.
இது
புனிதமான வரலாற்றை
பதிவுசெய்த காவியம்.
பகை முடிக்கும் காரியத்தில்
காவியமாய்ப் போனோரின்
கனவுகளை சுமந்தது.

குண்டை அணைத்து
உடல் சிதறும்வேளையிலும்
"தமிழீழம்" என்று
உச்சரித்த உணர்வுகளை
அருகிருந்து உணர்ந்து
வடிக்கின்ற வரிகளிவை.
உண்டு உடுத்து
ஒரு பாயில் படுத்துறங்கி,
இலட்சிய பாரத்தை
பகிர்ந்தொன்றாய்ச் சுமந்து
அந்த வீரர்கள்
வழியேகும்
மறவர்களின் மனக்கிடக்கை.

கற்பனைக் கருவெடுத்து
சொல்லுகின்ற கதையல்ல - எங்கள்
சத்தியப் போரில்
சந்ததி வாழ உழைத்தவரின்
சரித்திரங்கள் இவை.

இந்தக் காவியம்
இருபத்தினான்கு புனித வரலாறுகளை
சுமந்து வருகிறது.

இது
ஈழநாதம் வானோசையின்
முதல் வெளியீடு!




படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்



# லெப்டினன்ட் சங்கர்
# சத்தியநாதன்

*(கம்பர்மலை- வடமராட்சி)*



ஒரு நாள் அதிகாலை, யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஒரு வீட்டைச் சுற்றிச் சிங்கள இராணுவம் முற்றுகையிடுகிறது. 1982ம்ஆண்டு அக்டோபர்மாதம் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியபோது காயமடைந்த விடுதலைப்புலிகளுக்கு அந்த வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்ததைத்தொடர்ந்து இராணுவத்தினரால் அந்த வீடு முற்றுகை யிடப்படுகிறது.

அவ்வேளையில் அங்கிருந்த ஒரு இளைஞன் முற்றுகையிட்டவர்களை நோக்கி, தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டவாறே வீட்டு மதிலைத்தாண்டிக் குதித்து ஓடுகிறான். அவனை நோக்கிச் சிங்கள இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்படுகின்றன. அப்போது அந்த இளைஞனின் வயிற்றில் ஒரு குண்டு பாய்கிறது.

படுகாயமுற்ற நிலையிலுங்கூட அவன் இராணுவத்தினரிடம் அகப்பட்டு விடக்கூடாது என்ற இலட்சிய உறுதியோடு இரண்டு மைல்தூரம் இடைவிடாமல் ஓடி தன் இயக்கத் தோழர்களின் இருப்பிடத்தை அடைகிறான். தோழர்களிடம் தன் கைத் துப்பாக்கியை ஒப்படைத்து விட்டு கீழே விழுந்து மூர்ச்சையாகிறான். வயிற்றில் ஏற்பட்ட காயத்தி லிருந்து பெருமளவு இரத்தம் வெளியேறியமையினால் இரும்பையொத்த அவனது கட்டுடல் சோர்வடைகிறது.

விடுதலைப்போராட்டத்தின் ஆரம்ப காலகட்டமாகையால் அப்போது அங்கு போதியமருத்துவ வசதி ஏற்படுத்தப்படவில்லை. அவசர அவசரமாக முதலுதவிகள் செய்யப்பட்ட நிலையில் அவனைத் தோழர்கள் விசைப்படகுமூலம் கடல் மார்க்கமாகத் தமிழகத் துக்கு அழைத்துச் செல்கிறார்கள். இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கை, முற்றுகை இவற்றைத்தாண்டி தமிழகம்

www.padippakam.com

செல்ல ஒரு வாரமாகிறது. தமிழகத்தில் தலைவர் பிரபாகரனைக் கண்டு பேசும்வரை அவன் நினைவு தப்பவில்லை. இருந்தபோதிலும் வயிற்றில் ஏற்பட்ட காயத்தின் நிலை மோசமடைந்தது. அவனைப் பிழைக்கவைக்க அவனது தோழர்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. தலைவரும், தோழர்களும் கண்கலங்கி நிற்க (27.11.82ல்) அந்த இளைஞன் இயக்கத்தில் முதற்களபலியாகும் பெருமையை அணைத்துக்கொள்கிறான்.

அவன்தான். லெப்டினன்ட் சங்கர்-
சிங்கள இராணுவப்படையினர் வலைவிரித்துத் தேடிவந்த செ.சத்தியநாதன்.

வடமராட்சியைச் சேர்ந்த கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கர், அதே இடத்தைச் சேர்ந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தின் காலஞ்சென்ற கப்டன் பண்டிதரின் (ரவீந்திரன்) பள்ளித்தோழன்.
(லெப்டினன்ட் சங்கர் இறந்து இரண்டு ஆண்டுகளின்பின் இராணுவ முற்றுகையின்போது அச்சுவேலியில் ஏற்பட்ட நேரடிமோதலில் கப்டன் பண்டிதர் வீரமரணமடைந்தார்!)

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு. இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கெரில்லா வீரன். தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன். ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்துவிடக்கூடிய வெடிகுண்டுகளின் தயாரிப்புகளிலும் அச்சமில்லாது ஈடுபடுவான். அரசபடைகளின் தீவிரக் கண்காணிப்புக்கு அவன் இலக்காகியிருந்தாலும் அச்சம் எதுவுமின்றி கிராமங்களில், வீதிகளில் சாதாரணமாக உலவி வருவான். அதே நேரத்தில் சுழன்றுகொண்டிருக்கும் அவன் விழிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத் தவறும்கூட ஒரு கெரில்லா வீரன் என்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதில் சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பான். அரச படைகளின் கையில் சிக்க நேருமானால் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்திவிட்டுத் தானும் சாவது என்பதில் அவன் அசைந்தது கிடையாது. விடுதலைப்போராளிகள் எனப்படுபவர்கள், ஆயுதங்களோடு பிடிபடும் செய்திகளைப் பத்திரிகையில் வாசிக்கையில் குமுறுவான். அமைதியான தன்மையும், அதிகம் பேசாத சுபாவமும் கொண்ட சங்கரின் இந்தக் குமுறலுக்கு ஆழ்ந்த அர்த்தமுண்டு. ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு, அரச படைகளின் கையில் எதிர்ப்பு எதுவுமில்லாமல் ஒரு விடுதலைப்போராளி சரணடைவது என்பது கோழைத்தனமானது என்பது சங்கரின் உறுதியான முடிவாக இருந்தது. குறிப்பாக, தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் விடுதலைப்போராளிகளை ஆயுதங்களோடு அரச படைகள் கைது செய்வதை அனுமதிக்கும் போக்கானது, அரச படைகளுக்கு விடுதலைப் போராட்டத்தை முறியடித்துவிடுவதில் நம்பிக்கையை ஊட்டி, அவர்களின் துணிச்சலைக் கூட்டிவிடும் என்று சங்கர் கருதினான்.

இருபத்தொரு வயதில் அவன் சாதித்தவை தமிழீழப் போராட்ட வரலாற்றுக்குச் சொந்தமானவை. இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப்படையை அடக்கிவிட முடியும் என்று பாசிச சர்வாதிகாரி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிறீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்தபோது, நெல்லியடியில் அரச படைகள் மீது சங்கர் நடத்திய கெரில்லாத் தாக்குதல் தமிழீழம் காணும்வரை தமிழீழப் போராட்டம் ஓயாது, ஒழியாது என்பதை அரசுக்கு எடுத்துக்காட்டியது. ஜீப் சாராதியின் மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி, ஜீப் வண்டியை நிறுத்த வைத்து, கதவைத்திறந்து சாரதியை ஒரு கையில் வெளியே இழுத்து எறிந்தவாறு, மறு எதிரியை நோக்கிக் குண்டுகளைத் தீர்த்த லாவகம் சங்கருக்கே உரியது. இடுப்பிலிருந்து ரிவால்வரை எடுத்த மாத்திரத்தில் குறிவைக்கும் அவனது சாதுரியம் அலாதியானது. நெல்லியடியில் அரச படையினர் பீதியுற்ற நிலையில், சங்கர் கால்களை அகலவிரித்து பக்கவாட்டில் நின்று அரச படையினர் மீது குண்டுமாரி பொழிந்த காட்சி இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின்மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கெரில்லாத்தாக்குதலின் வெற்றிக்கு சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் பொலிஸ் நிலையங்கள் உஷார்ப் படுத்தப்பட்டிருந்தநிலையில், மாடிக்கட்டிடத்தோடு, பிரதான வீதியிலிருந்து சற்றுத்தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் மீது முன்பக்க வாயிலூடாகத் தாக்குதல் நடத்துவது என்பது விஷப்பரீட்சைதான். ஆனால் உயிரைக் கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு, புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் போன்ற போராளிகளின் முன்னே அபாயங்களும், தடைகளும் என்ன செய்துவிட முடியும்? ஜி.3 சகிதம் படுத்துக்கிடந்த சங்கர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தாக்குதலில் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து நடத்திய தாக்குதல் இப்பகுதி அரச படைகளை ஸ்தம்பிக்கச் செய்தது.

பொன்னாலைக் குண்டு வெடிப்பு நடவடிக்கையிலும் சங்கர் கடுமையாக உழைத்தவன். ஐக்கிய தேசியக் கட்சி (ஜெயவர்த்தனா கட்சி) உறுப்பினர் புன்னாலைக்கட்டுவன் தம்பாப்பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்குச் சங்கரே பொறுப்பு வகித்தான்.

எந்தவிதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பன்முனைப்பட்ட ஆற்றலுக்குச் சான்றாகும். ஒரு கெரில்லா தாக்குதலையடுத்து ஏற்படுகிற பரபரப்பு, எதிரிப்படைகள் அந்த இடத்திற்கு வருமுன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றிக்கும் மத்தியில் மிகுந்த வேகத்துடனும் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும்போது மிகுந்த கவனம் செலுத்துவான். தெளிவாக விளக்குவான். தனக்குத் தெரியாத விடயங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சகபோராளிகள் மத்தியில் தனி மதிப்பு வகித்து வந்தான்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவத் தலைமையிலேதான் வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர் இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவன். விடுதலைப் போராட்டமே சங்கரின் முழுமூச்சாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவன் இந்த வீரன். சமூக விரோத நடவடிக்கைகளையும் சந்தர்ப்பவாதிகளையும் அவன் அறவே வெறுத்தான். அவன் மனது மிகவும் சுத்தமானது. இத்தகைய இதய சுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறார்கள்.

இயக்கத்தலைவர் பிரபாகரனின் அரசியல் வழி காட்டலிலும், இராணுவக் கட்டுக் கோப்பிலும் சங்கர் ஊறி வளர்ந்தவன். பிரபாகரனின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற-தூய்மைமிக்க விடுதலைப் போராளிகளால் தான் தலைமையேற்று நடத்தப்பட வேண்டும் என்று அவன் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறான். பதவிப் பித்தர்களும் துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம் அமைதியான இந்தப் போர் மறவன் சினங்கொண்டு எழுந்திருக்கிறான்.

சாகும்தறுவாயிற்கூட அவன் தன் உற்றார், பெற்றோரை நினைக்கவில்லை. தம்பி தம்பி என்றுதான் அந்த வீரனின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. தம்பியும், மற்ற இயக்கப்போராளிகளும் கண்கலங்கி நிற்க அந்த வீரமகன் சாவிலே வீழ்ந்து போனான்.

ஒரு உண்மை மனிதனின் கதை என்ற ரஷ்ய நாவலைக் கடைசியாக வாசித்துக்கொண்டிருந்த சங்கர் அந்த நாவலை முழுதும் வாசித்து முடிக்கவில்லை. சங்கர் என்ற உண்மை மனிதனின் கதையே ஒரு வீர காவியம்தான்.



படிப்பகம்



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் செல்வநாயகத்துக்கு இயக்கம் சூட்டிய பெயர்கள் இவை. கல்வியங்காடு என்ற இடத்தில் ஏழை விவசாயக் குடும்பத்திலே பிறந்து ஆரம்பக் கல்வியைத் தொடரமுடியாத நிலையில் கல்வியைக் கைவிட்ட செல்லக்கிளி, ஆரம்பத்தில் அண்ணா கோப்பி விற்பனை வாகனத்தில் சாரதியாக வேலை பார்த்தான். செல்லக்கிளி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு அறிமுகமான காலத்திலிருந்தே இயக்க நடவடிக்கைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவன். எந்த வாகனத்தையும் மிகத் திறமையாக ஓட்டும் பயிற்சியைப் பெற்றிருந்த செல்லக்கிளி ஆயுதங்களாகட்டும், மோட்டார் இயந்திரங்களாகட்டும் பழுதடைந்தால் தானே திருத்தி இயக்கக்கூடிய மிகச்சிறந்த தொழில் நுட்ப அறிவையும் பெற்றிருந்தான். காட்டுப்பாதை

# லெப்டினன்ட் செல்லக்கிளி


## அம்மான் - சந்திரன்

### கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

களை அறிவதில் அதிசயிக்கத்தக்க ஆற்றலைக்கொண்டிருந்த செல்லக்கிளி, தனது வாழ்க்கையை, தான் வாழ்ந்த சூழ்நிலையை, ஒரு கெரில்லாப் பயிற்சிக் களமாக ஆக்கிக்கொண்டிருந்தான்.

ஓய்வு நேரங்களில் காட்டுப்பகுதிகளில் கட்டுத்துவக்குக் கட்டி மிருகங்களை வேட்டையாடுவது அவனது பொழுதுபோக்காகும். ஆரம்பகாலங்களில் காடுகளில் இயக்கத்துக்கான முகாம்களை அமைக்கும் வேலைநடைபெறும்போதெல்லாம் முகாம்களுக்குத் தேவையான அமைப்புக்களைக் கொண்ட மரங்களைத் தேடிப்பிடித்து வெட்டுவது, கொட்டில் போடுவது, கூரை வேய்வது போன்ற செயல்கள் அவன் தலைமையில், அவன் மேற்பார்வையில்தான் நடைபெறுவது வழக்கம்.

சிறுவயதிலிருந்தே தனது பெரிய தாயாரின் வீட்டில் வளர்ந்து வந்தவன் செல்லக்கிளி. அவனது பெரிய தாயாரின் மகன் செட்டி



என்ற தனபாலசிங்கம் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப்போராளியாக இருந்தபோதிலும் பின் முழுமையான சுயநலவாதியாகவே மாறினான். அவனது துரோகத்தனத்தைக் கண்டு மனம் கொதித்த செல்லக்கிளி அவனை அண்ணனென்றும் பாராது எச்சரித்தான். ஆனால் அவன் திருந்தவில்லை. செட்டியின் செயல் எல்லை மீறவே தலைவர் பிரபாகரனால் செட்டி சுடப்படுகிறான். செட்டி சுடப்பட்டதற்குப்பின்பும் இயக்கத்திற்கும், தலைவர் பிரபாகரனுக்கும் முழுமையாகத் தன் உயிரையே தருகின்ற அளவுக்குச் செயலாற்றினான் செல்லக்கிளி. செட்டியின் குடும்பத்தைக் காப்பாற்றுவது எனது கடமைதான். அதைவிட இயக்கத்திற்கு நான் ஆற்றவேண்டிய கடமை பெரிது. இது செல்லக்கிளி உறுதியாக உதிர்த்த வார்த்தைகள்.

இயக்கத்தையும் அவனையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவனது பணி இயக்கத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இயக்கத்தின் ஆரம்பகாலத்திலிருந்தே இயக்கம். நடாத்திய முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளிலெல்லாம் பங்குபற்றியவன் செல்லக்கிளி. முதல் முதலில் இயக்கம் உளவுப்படை பொலிஸ், அதிகாரியான கருணாநிதியை அழித்த நிகழ்ச்சி, பொலிஸ் உளவுப்படை தலைமையகத்தை சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை குழுவினர் மீதான தாக்குதல், உமையாள்புரம் இராணுவத்தின் மீதான தாக்குதல், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீதான தாக்குதல், கந்தர்மடம் வாக்குச் சாவடியில் நடந்த இராணுவத்தினர் மீதான தாக்குதல் என்று இயக்கம் நடாத்திய முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளிலெல்லாம் ஈடுபட்டுத் தன் தனி முத்திரைகளைப் பதித்தான் செல்லக்கிளி. (பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜயவர்த்தனாவைச் சுட்டுவிட்டு அவனிடமிருந்து எடுத்த ஜீப் வண்டியை குன்றும் குழியுமாயிருந்த வீதிகளினூடாக 15மைல் தூரத்தை 9 நிமிடத்தில் ஓட்டிச்சென்று அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இயக்க வீரர்களை இராணுவ முற்றுகைக்குட்படாது வெளிக்கொண்டுவந்த செயல் செல்லக்கிளியின் சாரதீயத் திறமைக்கு எடுத்துக் காட்டாகும்.) அவன் தலைமையேற்றுச் சிறப்புற நடாத்திய இன்னுமொரு தாக்குதல் இரகசியப் பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவின் மீதான தாக்குதாலாகும்.

7-4-78 அன்று அதிகாலை 5.30 மணியளவில், முருங்கன் மடு வீதியின் உட்புறமுள்ள காட்டுக்குள் அமைந்திருந்த மரமுந்திரிகைத் தோட்டத்துக்குள் இருந்த விடுதலைப்புலிகளின் இருப்பிடத்தை முற்றுகையிட்ட உளவுப்படை பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவினர், நிராயுதபாணிகளாக இருந்த விடுதலைப்புலி இளைஞர்களைச் சுற்றிவளைத்தனர். இயந்திரத்துப்பாக்கி, கைத்துப்பாக்கி, வேட்டைத்துப்பாக்கிகள் சகிதம் வந்திருந்த பொலிஸாரிடம் பேச்சுக்கொடுத்து தன் புத்திசாதுரியத்தால் அவர்களின் கவனத்தைத் திசைதிருப்புகிறான் செல்லக்கிளி. பொலிஸார் சற்று ஏமாந்திருந்த நேரத்தில் விடுதலைப்புலிகள் அனைவரும், ஒன்றாகப் பாய்கிறார்கள். அடுத்தகணம், பொலிஸாரிடமிருந்த சில ஆயுதங்கள் விடுதலைப்புலிகளின் கைகளுக்கு மாறுகின்றன. முதன் முதலாக அன்று தான் கையிலெடுத்த எஸ்.எம்.ஜி, செல்லக்கிளியின் கைகளில் வேமாக, இயங்குகிறது. சில நிமிடங்கள் வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. புலிகளை வேட்டையாடவென வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் பேரம்பலம், சார்ஜன்ட் பாலசிங்கம், கான்ஸ்டபிள் சிறீவர்த்தனா என ஒவ்வொருவராகச் சுட்டுவீழ்த்தப்பட்டனர். இறுதியாக பொலிஸார் கொண்டுவந்த ஆயுதங்களாலேயே அவர்கள் சுடப்பட்டதுடன் அவர்கள் வந்த காரையே எடுத்துக்கொண்டு விடுதலைப்புலிகள் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றனர். மூன்று நாட்களின் பின்னர்தான் பஸ்தியாம்பிள்ளை கோஷ்டியினரின் முடிவு பற்றிய செய்தி வெளியே தெரிய வந்தது. செல்லக்கிளி தலைமையிலான இந்தத் தாக்குதல் நிகழ்ச்சியானது தமிழ்ப்போராளிகள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆபத்து வரும் வேளைகளில் நிதானமாகச் சிந்தித்து, வேகமாகச் செயற்படும் தன்மை செல்லக்கிளிக்குக் கூடவே பிறந்ததாகும். முன்பொருதடவை செல்லக்கிளி இருந்த கிராமமான உடையார்கட்டுக்கு செல்லக்கிளியைத் தேடி சப்.இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை சென்றபோது, செல்லக்கிளியின் வீட்டுக்கு அண்மையில் சென்று செல்லக்கிளியிடமே செல்லக்கிளியைப் பற்றி விசாரித்தான். செல்லக்கிளியோ நிலைமையை உணர்ந்து சற்றும் தடுமாறாது வாங்கோ ஐயா செல்லக்கிளியின்

www.padippakam.com



வீடு பக்கத்தில்தான் இருக்குது, கூட்டிக்கொண்டுபோய்க் காட்டுறன், என்று தன் வீட்டிற்கே சப்.இன்ஸ்பெக்டரை அழைத்துச் சென்று வீட்டைக் காட்டிவிட்டு வேகமாக மறைந்துவிட்டான். அதன் பின்புதான் சப்.இன்ஸ்பெக்டர் செல்லக்கிளி தன்னை ஏமாற்றிவிட்டுத் தப்பிச் சென்றதைத் தெரிந்து ஆத்திரப்பட்டான்.

தனக்குச் சரியெனப்பட்டதை உதாரணங்கள், பழமொழிகளோடு விளக்கி வாதாடுவது செல்லக்கிளிக்குக் கைவந்த கலை. சட்டம் படித்துவிட்டு தமிழினத்தையே ஏமாற்றிக் கொண்டிருந்த கூட்டணி எம்.பிக்கள் மத்தியில் நின்று பள்ளிப்படிப்பையே முடிக்காத செல்லக்கிளி, ஆறு ஆண்டுகளாக நாங்கள் காடுமேடு என்று அலைகிறோம். நீங்கள் முப்பது ஆண்டுகளாக என்ன செய்தீர்கள்? என்று அவர்களின் பொதுமேடையிலேயே ஏறி வினா எழுப்பினான். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கவென தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் கூட்டம் கூட்டப்பட்ட இடத்துக்குச் சென்று தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி வாதிட்டான் செல்லக்கிளி. சுயநலமிகள் அவன் வார்த்தையை ஏற்கவில்லை. ஆனால், தமிழீழ மக்கள் செல்லக்கிளியின் கருத்தை முற்றுமுழுதாக ஏற்று உள்ளூராட்சிமன்றத் தேர்தலை முற்றாகப் பகிஷ்கரித்தனர்.

**இயக்கம் வளர்ந்துவரும் நிலையில் இயக்க முன்னோடி வீரர்களுக்குப் பொறுப்புக் களைக் கொடுத்து அவர்களுக்கு அனுபவப் பயிற்சியைக் கொடுக்கும் வகையில் அந்தத் தாக்குதலுக்கான முழுப்பொறுப் பையும் செல்லக்கிளியிடம் ஒப்படைத்துவிட்டுத் தானும் ஒரு வீரனாகத் தாக்குதலில் கலந்துகொண்ட இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு செல்லக்கிளியின் மறைவு பேரதிர்ச்சியைக் கொடுக்கிறது.**

1983ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ம் நாள், வடமாகாணத்தின் மிகப்பெரிய இராணுவமுகாமான பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்குச்செல்லும் வீதியில்திருநெல்வேலி என்ற இடத்தில் ரோந்து வந்து கொண்டிருந்த இராணுவ வண்டிகள் இரண்டின்மீது செல்லக்கிளி தலைமையிலான பதினான்கு விடுதலைப்புலிகளைக் கொண்ட கெரில்லா அணி தனது தாக்குதலை ஆரம்பிக்கின்றது. வேகமாக முன்னால் வந்த ஜீப் வண்டி, விடுதலைப்புலிகள் வைத்த கண்ணிவெடி சரியான நேரத்தில் வெடித்ததால் மேலே தூக்கி எறியப்பட்டு கீழே வந்து விழுகிறது. அதில் வந்த சிங்கள இராணுவத்தினர் கீழே குதித்து தாம் வைத்திருந்த துப்பாக்கிகளைத் தூக்கியபடி ஓடமுயல்கின்றனர். பின்னால் வந்த இராணுவ டிரக்வண்டியிலிருந்த இராணுவத்தினர் பீதியினால் டிரக் வண்டிக்குள்ளேயே பதுங்குகின்றனர். விடுதலைப்புலிகளின் துப்பாக்கிக் குண்டுகள் டிரக்கை விட்டு எழ முயன்ற இராணுவத்தினரின் உடல்களைச் சல்லடையாக்குகின்றன. தமிழீழத்தில் முதல் தடவையாக ஏராளமான சிங்கள இராணுவத்தினர்



படிப்பகம்

கொல்லப்படுகின்றனர். இதைக்கண்டு உற்சாக மிகுதியால் வெற்றிக்களிப்புடன் மறைவிடத்திலிருந்து தான் வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கியை இராணுவ வண்டியை நோக்கியபடியே எழுந்துநின்று சுடத்தொடங்குகிறான் செல்லக்கிளி. அதே நேரம் ஜீப் வண்டிக்குள் இருந்து சிங்களச் சிப்பாய் ஒருவன் சுட்டகுண்டு நேராகச் செல்லக்கிளியின் இதயத்தை ஊடுருவிச் சென்றது. சப்தமெதுவுமின்றிக் கீழே விழுகின்றான் செல்லக்கிளி.

13 இராணுவத்தினரை வீழ்த்தி ஏராளமான ஆயுதங்களை எடுத்த உற்சாகத்தில் திளைத்த விடுதலைப்புலிகள், செல்லக்கிளியின் மறைவுச்செய்தியை அறிந்ததும் அதிர்ச்சியடைந்து சோகத்தில் ஆழ்கின்றனர். முதல் வாரத்தில் இரண்டு முன்னோடி வீரர்களை இழந்த விடுதலைப்புலிகள் களத்தில் செல்லக்கிளியையும் இழந்ததால் வெற்றிக்கான எக்களிப்பு சிறிதுமின்றி சோகமே உருவாகத் தம் இருப்பிடம் நோக்கித் திரும்புகின்றனர். இயக்கம் வளர்ந்துவரும் நிலையில் இயக்க முன்னோடி வீரர்களுக்குப் பொறுப்புக்களைக் கொடுத்து அவர்களுக்கு அனுபவப்பயிற்சியைக் கொடுக்கும் வகையில் அந்தத் தாக்குதலுக்கான முழுப்பொறுப்பையும் செல்லக்கிளியிடம் ஒப்படைத்துவிட்டுத் தானும் ஒரு வீரனாகத் தாக்குதலில் கலந்துகொண்ட இயக்கத்தலைவர் பிரபாகரனுக்கு செல்லக்கிளியின் மறைவு பேரதிர்ச்சியைக் கொடுக்கிறது. எதிர்காலத்தில் செல்லக்கிளியிடம் ஒப்படைக்கக்கூடிய பொறுப்புக்களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த பிரபாகரனுக்கு செல்லக்கிளியின் மரணம் இயக்கத்தில் ஒரு பெரிய தேக்கமாகப் படுகிறது. ஆம்! இயக்கத்துக்கு அவன் ஆற்றிய பணிகளைப் பற்றியும் அவனின் ஆற்றலைப்பற்றியும் தலைவர் பிரபாகரனை விட வேறு யாருக்கும் முழுமையாகத் தெரிந்திருக்க நியாயமில்லை.

இயக்கம் தொடங்கிய காலத்தில் சுழல்துப்பாக்கி ரவைகளை, ஈயத்தை உருக்கித் தயார் செய்ய உதவியதுடன், பின்னர் இயக்க வீரர்களுக்குத் தானியங்கித் துப்பாக்கிகளை வைத்துப் பயிற்சி கொடுக்க வெளியில் இரவு பகலாக அலைந்து குறைந்த விலையில் ஏராளமான ஒறிஜினல் துப்பாக்கி ரவைகளை வாங்கி வந்து சேர்த்தது-இவையெல்லாம் செல்லக்கிளி இயக்கத்துக்குச் செய்த மறக்கமுடியாத சேவைகளாகும். அன்று செல்லக்கிளி வாங்கிவந்து குவித்த துப்பாக்கி ரவைகளை வைத்தே இயக்கத்தின் முன்னணி வீரர்கள் எல்லாம் சுட்டுப் பயிற்சி எடுக்க முடிந்தது. ஏன் இயக்கத்துக்கென வாங்கப்பட்ட முதல் துப்பாக்கி கூட செல்லக்கிளிக்குச் சொந்தமான இரண்டு மாடுகளை விற்றுக்கிடைத்த பணத்தில் வாங்கியதே!

படித்தவர்கள் குழம்பிய காலத்திலும், தான் குழப்பமடையாது இருந்து வந்த செல்லக்கிளியின் கிராமவாசனை தொனித்த வயதுக்கு மீறிய வாதங்களையும் வார்த்தைப் பிரயோகங்களையும் கேட்ட இயக்கவீரர்கள் அம்மான் என்று அன்புடன் அழைத்து வந்தார்கள். அம்மானது திறமையான மதிநுட்பமான செயலாற்றல்கள் பல விடுதலைக்குப்பின் சரித்திரத்தில் மட்டுமே வெளிவரவேண்டிய செய்திகள். அவனது இறுதிக்காலமானது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனை. ஆம்! சரித்திரம் படைத்த செல்லக்கிளி சரித்திரமாகிய அந்த நாளானது தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டப் பாதையில் ஒரு புதிய சகாப்தம் உருவாக்கப்பட்ட நாளாகும்.


*நன்றி: எரிமலை ஜூலை 97*

www.padippakam.com



# லெப்டினன்ட் நித்திலா

*நல்லையா பவானி*



ஆகாயத்தைத் தனது பச்சைக் குழைகளால் மூடி அடக்க முனைந்து கொண்டிருக்கும் பாசறை.... காலைநேரம். வழமைபோல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

எனக்குத்தரப்பட்ட வேலையைச் செய்துமுடித்துவிட்டு அதைச் சரிபார்ப்பதற்காக எமது பொறுப்பாளரைச் சென்றடைகிறேன்.... அப்போதுதான் அந்தச்செய்தி என்னிடம் சொல்லப்பட்டது. நீயுமா எம்மைவிட்டுப்பிரிந்துவிட்டாய்... நித்திலா.... இந்தச் செய்தி பிழையாக இருக்கக் கூடாதா...?

ஒடிசலான உயர்ந்த உன் தோற்றத்தைப் பார்த்து நாங்கள் கிண்டல் செய்வோம். காற்றுச் சிறிது பலமாக அடித்தால் சுற்றியுள்ள மரக்கொப்புகளிற்தான் நாம் உன்னைத்தேட வேண்டும் என்போம். "எதிரியை நோக்கி என் ஆயுதத்தை உயர்த்துவதற்கு என் கைகளுக்கு பலமிருக்கிறது". என கைகளை உறுதியாகப் பிடித்துக்காட்டி உள்ளத்தில் தளராத உறுதியிருக்கிறது... இதனால் நான் விடுதலைப்புலிகளில் இருப்பதற்குத் தகுதியுடையவள் என்று எமது கிண்டலை ரசித்தபடி நீ புன்சிரிப்போடு கூறுவாய்.

03.07.1988 அன்று விஸ்வமடுச்சந்திக்கு மிக அருகில் அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மீது பதுங்கித்தாக்குதல் ஒன்றை மேற்கொண்ட சமயம் எதிர்பாராத விதமாக நாலாபக்கமும் எதிரி இராணுவத்தால் சூழப்பட்டீர்கள். எதிரியிடமிருந்து எஸ்.எல்.ஆர் துப்பாக்கியைக் கைப்பற்றமுடிந்தது. ஆனால் எமது தரப்பில் பெண்போராளி மரியாவை இழக்க நேர்ந்தது. நெற்றிப்பொட்டில் சூடுபிடித்து மரணத்தின் மடியிற் படுத்துவிட்டாள் மரியா. உனது தோழியின் உடலை எதிரி கைப்பற்றிவிடக்கூடாது என்ற ஆவேசத்தில் நீயும் உன் தோழிகளும் எவ்வளவோ முயன்றீர்கள். முடியாமற்போன போது நீ அடைந்த வேதனை...



படிப்பகம்

www.padippakam.com

எமது வளர்ச்சியில் எவ்வளவு அக்கறைப்பட்டாய். உயர்தர வகுப்புப் படிக்கின்றபோது இயக்கத்துடனான தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட நீ பாடசாலைக்கல்வியில் கவனம் செலுத்தவில்லை. தேச விடுதலை இயக்கம் பற்றி அறிந்துகொள்வதற்கும், விவாதிப்பதற்கும் தலைமறைவாக இயங்கிவரும் போராளிகளுடன் தொடர்புகொள்வதற்கும், படிப்பதற்குரிய நேரத்தையும், சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொண்டாய். தேச விடுதலையில் உனக்கிருந்த ஈடுபாடு காரணமாகவும், உனது செயற்திறன் கடின உழைப்புக்காரணமாகவும் 1985 ஜனவரியில் நெல்லியடிப் பிரதேசத்தில் தேச விடுதலைக்காதரவாக பெண்களை அணிதிரட்டுவதற்கும், அவர்களின் சமூகப் பிரச்சனைகள் பற்றி ஆராய்வதற்கும் பொறுப்பாக விடப்பட்டாய். 1984ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் மார்கழியில் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரப்பறவைகள் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருத்தியானாய்.

பாடசாலை மாணவிகள் மத்தியிலும், கிராமப்பெண்கள் மத்தியிலும் இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்தி, குறைந்த எண்ணிக்கையானாலும் உறுதியான பெண்கள் அமைப்பொன்றை நெல்லியடிப்பிரதேசத்தில் கட்டியெழுப்பினாய். முதலில் பதினைந்து பெண்கள் அளவில் உன்னுடன் சேர்ந்து இரகசியமாகப் பங்காற்றினாலும் நாளடைவில் இது அதிகரித்தது. இவ்வாறு தேசவிடுதலைக்குப் பெண்களை அணிசேர்ப்பதிலும் இப்பெண்களுக்குரிய சமூகப் பிரச்சனைகளை அணுகுவதிலும் நீ முனைப்போடு செயற்பட்டதால் உன் பொறுப்பு அதிகரித்தது. மேற்கண்ட வேலைகளைத் திட்டமிடுவதற்கும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டாய். வெயில் என்றும் மழை என்றும் பாராமல், உணவையும் உறக்கத்தையும் பொருட்படுத்தாமல் உனது கடமைகளை நிறைவேற்றக் கடுமையாக உழைத்தாய். இச்சமயத்திலேயே (1986) பௌதிக விஞ்ஞானப் பட்டப்படிப்பிற்கான பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது.

தேச விடுதலைக்கான உனது கடமையோடு படிப்பையும்கூட நீ தொடர்ந்தாய். விடுமுறைநாட்களைத்தவிர மேலும் அடிக்கடி லீவு போட்டு உனது பிரதேசங்களுக்குச் சென்றுவிடுவாய். பல பின்தங்கிய கிராமங்களுக்குள் பிரவேசித்து அங்குள்ள மக்களோடு பழகி அங்குள்ள குறைபாடுகளைக் கண்டு அவற்றை நிவர்த்திசெய்ய வேண்டும் என்று கடுமையாக உழைத்தாய். குறிப்பாக மழலைகளின் எதிர்காலத்தைக்குறித்து மிகவும் அக்கறைகொண்டிருந்தாய். இயக்கத்தின் வேலைத்திட்டங்களான இலவச பாலர் பாடசாலைகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், தும்பு, பன்னம், தையற்கைத்தொழில் பயிற்சி நிலையங்களை நிறுவுவதில் எவ்வளவு விரைவாகவும் துடிப்பாகவும் செயற்பட்டாய். இவற்றோடிணைந்த மாதர் சங்கங்கள், மகளிர் நூல்நிலையங்களை நிறுவி மக்களுக்குள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்யத் துணிந்ததோடு இவ்வமைப்புக்களின் ஊடாக தேச விடுதலை இயக்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் மிக நெருக்கத்தை ஏற்படுத்தினாய். நாட்டில் நமக்கென்ன பிரச்சனை என்பதைப் புரிந்துகொள்ளாத பெண்கள் எத்தனைபேர்? அந்நியனின் அடிவருடிகளினதும், ஆயுதக்குழுக்களினதும் துரோகத்தனத்தைப் புரிந்துகொள்ளாதவர்கள் எத்தனைபேர்? சமூக அமைப்பு பெண்களை எவ்வாறு ஒடுக்குகின்றது என்பதைக்கூட விளங்கிக்கொள்ளாதவர்கள் எத்தனை பேர்? பெண்கள் விழிப்படைந்தால் தான் நாடு விடுதலை அடையமுடியும் என்ற உண்மைக் கருத்தை உணர்ந்துகொண்ட நீ இப்பெண்கள் மத்தியில் கலந்துகொண்ட கலந்துரையாடற் கூட்டங்கள்தான் எத்தனை. ஏன் இன்றுகூட எமது பாசறையில் பெண்களின் உரிமைப்போராட்டமானது ஆண்களுக்கு எதிரானது அல்ல... ஆண்கள் ஆதிக்கம் செலுத்துகின்ற சமூக அமைப்பிற்கு எதிரானது என்ற கருப் பொருளில் நீ ஆற்றிய உரை, உனது உரிமைக்குரல்... சகல போராளிகளின் மனத்திலும் தீர்க்கமாய் ஒலித்துக்கொண்டிருக்கிறது. கிராமங்களுக்குள் இருக்கும் ஆண், பெண் கலைஞர்களைத் தேடிக்கண்டுபிடித்து அவர்களின் மூலம் சிறந்த கலைப்படைப்புக்களை நவீன, பாரம்பரியக் கலை அம்சங்களோடும், புரட்சிகர கண்ணோட்டத்தோடும் தயாரித்து மக்கள் முன் கொண்டுவருவதில் முன்நின்றாய். குறிப்பாக பாப்பாக்களின் பிரகடனம் என்ற சிறுவர் கவிதா நிகழ்வு மக்களை வெகுவாகக் கவர்ந்ததல்லவா!



படிப்பகம்

www.padippakam.com

1987 மே ஒபரேசன் லிபரேசன் பொழுது சிறீலங்கா இராணுவத்தின் கெடுபிடிக்குள், குண்டுவீச்சு விமானங்களால் தொடர்ச்சியாகக் குண்டுகள் வீசப்பட்டன. ஆட்லறி ஷெல்கள் அடிக்கப்பட்டன. மக்கள் மாண்டு கொண்டிருக்கிறார்கள்... நாம் அவசர அவசரமாக உணவுசமைத்துக் களத்தில் நிற்கும் போராளிகளுக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம்.... எமது பக்கம் இழப்புகள் அதிகரித்தன. சற்றில் எதிரி தீவிரமாக முன்னேறுகின்றான். நாம் பாதுகாப்பற்ற நிலையில் தலைமறைவாகிவிட்டோம். மேலும் இரண்டு நாட்கள் இராணுவத்தின் முற்றுகைக்கு நடுவில் எவ்வாறோ தப்பித்துக் கொள்ளுகின்றோம். ஆனால் ஒருவரை ஒருவர் பிரிந்துவிட்டோம். இச் சூழ்நிலையில் நீ துணிந்து ஒரு காரியத்தைச் செய்தாய்... நீயும் உன் தோழிகள் இருவரும் சாதாரண குடும்பப் பெண்கள் போல வேடம் தரித்து இரண்டு பெரிய தடைமுகாம்களைக் கடக்கின்றீர்கள். கால்நடையாகவே தென்மராட்சியை அடைகின்றீர்கள். இச்சம்பவங்களின் பின் 1987 ஜுலையில் நூறு பெண்கள் ஆயுதப்பயிற்சி பெற்றோம். இதில் பவானியாகவல்ல நித்திலாவாக நீயும் இணைந்துகொண்டாய். பயிற்சியை முடித்துக் கொண்டு புதிய வேகத்துடன் புதிய தெம்புடன் உன் கடமையைத் தொடர ஆரம்பித்தாய். பெற்றோரின் வேண்டுதலுக்காகப் படித்துக்கொண்டிருந்த நீ இப்போது படிப்பை முற்றாக நிறுத்திவிடப் போவதாகக் கூறினாய். ஆனால் எப்பொழுதுவரை படிப்பைத் தொடரமுடியுமோ அதுவரை படிப்பைத் தொடரும்படி இயக்கம் முடிவு சொன்னது. எனவே படித்துக்கொண்டே யாழ் நகரப் பகுதியில் சமூக, அரசியல் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டாய். அத்தோடு இயக்கத்திலிருந்துகொண்டு படிப்பைத் தொடரும் தோழிகளுக்கு வேண்டிய சகல தேவைகளையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாய்.

இலங்கை-இந்தியக் கூட்டுச் சதியை எதிர்த்து இந்தியாவின் துரோகத்தனத்தை மக்களுக்குத் தோலுரித்துக் காட்ட திலீபன் உண்ணாவிரதம் மேற்கொண்ட சமயம் மகளிர் படைப்பிரிவு ஒழுங்குசெய்த பாதயாத்திரையில் பிரதான பங்குவகித்தாய். இதன் மூலம் தமிழீழ மக்கள் மீது அந்நிய சக்திகள் விரித்துள்ள சூழ்ச்சிவலையை மக்களுக்குப் புரியவைத்தோம். இதில் உனது பங்கு முக்கியமானது.

அந்நியனை அடிவருடிக்கொண்டிருந்த துரோகக் கும்பல்கள் அவர்களின் தயவில் இருந்துகொண்டு நிராயுதபாணிகளான எமது தோழர்களைப் படுகொலை செய்துபோட்ட நேரம் துரோகிகளை எதிர்த்து யாழ் நகரில் நடைபெற்ற மிகவும் எழுச்சிகொண்ட வெகுஜனப்போராட்டங்கள் உனது கடமைகளை நீ திறம்பட ஆற்றியிருப்பதை எமக்கு உணர்த்தின.

தொடர்ந்து பத்தாம் மாதம் தமிழீழ - இந்தியப்போர் வெடித்தது. துப்பாக்கியேந்திக் களம்புகுந்த தோழியரில் நீயும் ஒருத்தியானாய். பெண்களின் குழுவொன்றுக்குத் தலைவியானாய்.

ஓர் ஆண்டும் எட்டு மாதங்களும் ஓடிமறைந்தன... பச்சை முகடுகளின் கீழ்... நாங்கள் மண்வெட்டியாலும் சவளினாலும் மண்ணை அகற்றிக் காவல் அரண்களை அமைத்தபோது... கோடரியாலும் வாளினாலும் மரங்களைத்தறித்து கூடாரங்களை அமைத்தபொழுது.... கப்பியில் இருவர் மண்ணிழுக்கும் கயிற்றில் மூவர்... கிணற்றிற்குள் இருவர், நின்று கிணறு தோண்டியபொழுது மண்ணில் குளித்தாலும் மகிழ்ந்திருப்போமே. அந்தப்பொழுது... நடையாய் நடந்து... முதுகொடியச் சுமந்தாலும் அதை விரும்பினோமே...

அந்தப்பொழுது, எள்ளு ஆனாலும் ஏழாய்ப் பிரித்தோமல்லவா... அந்தப்பொழுதில் உன்... தோழிகளோடு நீ சுதந்திரமாய் மிகக் குதூகலமாய் இருந்ததெல்லாம் இப்போது அல்பங்களில் நிழற்படங்களாய்... நெஞ்சங்களில் நினைவுப்படங்களாய்.. நித்திலா...! நீ வரமாட்டாயா! எத்தனை கனவுகளை சுமந்து கொண்டிருப்பாய்.

எங்கள் பாசறைக்கு வந்து எங்களைக் காணப்போவதை எண்ணி எவ்வளவு களிப்படைந்திருப்பாய்...





படிப்பகம்

www.padippakam.com

சமூக, அரசியல் வேலைகளில் உனக்கு ஏற்பட்ட பிரச்சனைகளை எம்மோடு விவாதிக்க எண்ணியிருப்பாய்... அத்தனை கனவுகளும்... தவிடு பொடியாக உன்னோடு கூடவே மேஜர் மாறன், மகேந்தி, கேசவன், சுமன், ரூபன், பொபி, சபா, அர்ச்சுதன், அகிலன், விஜயன், நவம், லெப்.அருள், முரளி... பன்றிக்கெய்தகுளத்தில் வஞ்சகரோடு நடத்திய போரில் உடல்கள் சல்லடையாக்கப்பட்டதை எண்ணும்போது... இதயமே வெடித்துவிடாதா?

(தாய்க்குத் தலைமகளாய் பின் மூன்று தம்பியரைக் கொண்டிருந்தாய்... அதில் இருவரை உன் பாதையில் தந்துவிட்டாய்... ஒவ்வொரு தமிழனும் தன் கடமையை உணரவேண்டும்... வீட்டிற்கொரு மகனை, மகளை விடுதலைக்காய்த் தரவேண்டும் என்பாய்.)

இறுதிமூச்சுவரை இலட்சியத்திற்காகவே உழைத்து களத்தில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட உன் வரலாற்றை யார் மறப்பார்கள்.

*நன்றி:* சுதந்திர தாகம் 06.04.1991



படிப்பகம்

www.padippakam.com

அருமையான குரல்வளம். கல்விச்சாலையில் நிகழ்ந்த அனைத்து இசை நிகழ்வுகளையுமே ஆக்கிரமித்தான். அமோக வரவேற்பு. கவிதை, கட்டுரை என ஆளுமை பரந்தது. விளையாட்டுத் துறைகளிலுந் தான் மகா சூரன். விளையாட்டுக்களில், மெய்வல்லுனர் போட்டிகளில் பரிசில்களைச் சான்றிதழ்களை அள்ளிக் குவித்தான்.

ஆயினும்,

இவ்வளவு மட்டும் போதுமானதா? மனிதத்துவம் பூரணமெய்தியதன் குறியீடுதானா? இல்லை என்ற உண்மையே உறுத்திற்று. சுதந்திரம்! அதுவே முதன்மை என்பதை உணர்ந்து கொண்டான். மோகன்குமார் வாணனாகியதன் அடித்தளமிது. அவனது தினக்குறிப்பேடு இதையே கோடி காட்டுகிறது.

தினக்குறிப்பேடு-

# கப்டன் வாணன்

அஃறிணை வடிவந்தான். ஆனால், ஒருவரது
ஆத்மாவின் உணர்வு வடிவம்.
அதனாற் பேசவே
செய்கிறது.
இவ்வழியே
இவன் பகர்கிறான்!
எம் இனம் பெற்ற சுதந்திரம்
பெறுமதி வாய்ந்தது அதை எதிரியிடம்
விட்டுவிடலாமா? கூடாது எமது இனத்தின் சுதந்திரத்தை
மீண்டும் பெற்றுவிட இறுதி மூச்சுவரை போராடுவோம்!


உரும்பிராய்-

வீரத்தின் விளைநிலம். உண்மைதான். தாயக விடுதலைக்காய் எத்தனையோ மாவீரர்களையே ஈந்து நிற்கும் மண். இந்த மண்தான் கப்டன் வாணனுக்கும் தாய்மடி. அவனது அன்பு, பாசமெல்லாம் அங்கு இழையோடிக் கிடந்தது.

ஆனால், வந்து நுழைந்தனர் அழையாவிருந்தாளிகள். அவர்தம் அமைதிப் பணியின் சரித்திரச் சான்றுகளாய் விளங்கும் தினங்கள் எத்தனையோ!

அவற்றுள் ஒன்று 21.10.1987.

கருத்தை மூடிக்கொண்டு தமிழீழத்தினுள் புகுந்தவர்கள். கண்களை மூடிக்கொண்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் புகுந்தனர். துப்பாக்கிச் சன்னங்கள் துப்பித் தள்ளின. வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள், நோயாளிகள், பார்வையாளர்கள்....





படிப்பகம்

ஏராளமான தமிழ் உயிர்கள் உறிஞ்சப்பட்டன. அவர்களுள் ஒருவராய் சண்முகலிங்கம். அம்புலன்ஸ் ஓட்டுநர். வாணனின் தந்தை.

இந்த அமைதிக்கான அமர்க்களத்துள் இவன், இவனது தம்பி சிக்கி நின்றனர். தம்பியின் கையிற் காயம்-அவசரமாய் கட்டுப் போட்டான். அவனை அணைத்தபடி சரிந்து குவியும் சடலங்கட்குட் புகுந்து கொண்டான்.

வேறு வைத்தியர்கள், உயரதிகாரிகள் விரைந்து வந்தனர். எஞ்சியோரை மீட்க முனைந்தனர். இந்த ஆரவாரத்தைச் சாதகமாக்கினான் அவன். காயத்தின் வழிக் குருதிப்பெருக்கினாற் சோர்வுற்றிருந்த தம்பியை தோளிற் தூக்கினான். சுற்றுமதிலேறிக் குதித்து நல்லூரிற்கு வந்து சேர்ந்தான். அங்கு, தம்பிக்கு மருந்து கட்டிக்கொண்டு தாயாரைச் சென்றடைந்தான்.

தந்தையின் மறைவு-விழிகளைத் துளைத்துச் சென்ற கொடூரக்காட்சி பிஞ்சு மனத்தை வெகுவாய்த் தைத்துவிட்டது. சுதந்திரம் பற்றிய எண்ணங்கள் அவனுட் தூவத் தொடங்கின. போராட்டம் பற்றிய உணர்வு முளைவிடத் தொடங்கியது.

அப்போதும்-

பத்தாம் ஆண்டு பயிலும் அப்பாவி மாணவனாய் இருந்த அவனை அந்நியப்படையின் ஆக்கினைகள் அலைக்கழித்தன. அடிக்கடி கைதுசெய்யப்பட்டான். உதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டான். அம்மா லோகநாயகியாற் தாங்கிக் கொள்ள முடியவில்லை. துணையை இழந்த பறவை தன் குஞ்சுகளையாயினும் காப்பாற்றத் துடித்தது. அது தாய்மையின் இயல்பே! ஒருவாறு பிள்ளைகளைக் கொழும்பிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தார் அம்மா. நிம்மதிப் பெருமூச்சு. ஆனால் அன்னை நிலையிலிருந்து அன்னியப்பட்ட என்னை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பு... அனுப்பு என அம்மாவுக்கு ஒரே அரிகண்டம். சண்டை கூடப் போட்டான். அவனைச் சமாதானப்படுத்த அம்மாவுக்குப் படாதபாடு. ஒருவாறு தேற்றியாயிற்று.

அவனையறியா வண்ணம் அவனை வெளிநாட்டுக்கு அனுப்பிவிடுவதற்கான ஏற்பாடுகள் நடந்தன. ஏதோவிதமாய் அறிய வந்துவிட்டது. ஆத்திரமடைந்து விட்டான். அந்த விடுதியில் போத்தலொன்று கண்களில் எற்றுப்பட்டது. ஆவேசமாய் எடுத்தான். உடைத்தான். கையில் பெரிதாய் எல்.ரி.ரி.ஈ என்று எழுதினான். குருதி ஆறாய்க் கொட்டியது. ஆனால் மருத்துவரிடம் செல்வதோ ஆபத்து. அது எதிரிகள் சூழ்ந்த அந்நியமண்! அம்மா தன்னால் இயன்ற முதலுதவி அளித்தாள். குருதிப்பெருக்கு கட்டுப்பட்டது.

தொடர்ந்தும் கொழும்பில் வைத்திருப்பது நல்லதல்ல. அம்மாவை அச்சம் கௌவியது. தமிழகத்துக்கு அழைத்துச் சென்றார். சிகிச்சை நடந்தது. மெல்லக் காயம் ஆறிற்று. விடாப்பிடியாய் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விட்டான். போராளிகளுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டான். ஆதரவாளனாகச் செயற்படத் தொடங்கினான். இராணுவ நடமாட்டங்களைக் கண்காணித்துத் தகவல்களைக் கொண்டு வந்தான்.

இவ்வேளை இந்திய ஆளும் வர்க்கமானது தமிழீழத்தில் கற்க விரும்பிய பாடம் கற்று முடியும் தறுவாயினையும் அடைந்தது. சுதந்திரத்தையே உயிர்மூச்சாய் கொண்ட ஒரு நாடு. அது சின்னஞ் சிறுசாய் இருப்பினும் அதன் வீரஞ்செறிந்த எதிர்ப்பின் முன்னே வல்லரசு என்பது வெறும் புல்லே. என்ற உண்மையினைச் சுமந்தவாறு இந்தியப்படை பின் வாங்கிக்கொண்டது. இடையே தாயகம் மீது தற்காலிகமாக கவிந்திருந்த வசந்தத்தின்போது இவனும் இவனது அண்ணனும் இணைந்து கொண்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுநேர உறுப்பினர்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டனர்.

www.padippakam.com

இருவரும் ஒன்றாகவே பயிற்சியெடுத்தனர். வாணன் உழவு இயந்திர விபத்தொன்றில் சிக்கிக் கொள்கிறான். ஒரு கை உடைந்து விட்டது. சிகிச்சை சிறிது நாட்கள்தான். நீண்டநாள் ஓய்வென்றால் அது விடுதலை வீரனிற்கு சாவிற்தான். என்று கூறுமாப்போல் துள்ளியெழுந்து வந்தான். மீண்டும் பயிற்சியைத் தொடர்ந்தான்.

பயிற்சி நிறைவெய்தியதும் காவலரண் ஒன்றில் கடமையாற்றினான். இரவு பகலாய் மூடாத இந்த இமைகளில் ஒருவனாய் அவனும் கடமை புரிந்தான்.

இவ்விதம் காவலரண்களில் கடமை புரிகிற வேளைகளில் எதிரிப்படையினரின் நிலைகளைச் சென்று கண்காணிப்பான். ஆனால் கத்தி விளிம்பில் நடக்கிற இச் செயலின் ஆபத்து அவனுக்குப் பெரிதாய்ப் பட்டதில்லை. மகிழ்ச்சி கொடுத்தது. உற்சாக ஊக்கியாய் இருந்தது.

03.11.1990 அன்று நடாத்தப்பட்ட மாவிட்டபுரம் சிறீலங்காப்படை மினிமுகாம் தாக்குதலுக்கு முன் வேவு பார்க்கும் பணியினை இவன் ஏற்றிருந்தான். மிகச் சாதுரியமாய்ச் சென்று தகவல்களைத் திரட்டி ஒன்றும் மீதியின்றித் தளபதியிடம் பகர்ந்தான். மேலதிக உறுதிப்பாட்டிற்காக தளபதியினால் அனுப்பப்பட்ட போராளிகளினால் கொண்டுவரப்பட்ட தகவல்களும் இவனுடையதை ஒத்து அச்சொட்டாகவே இருந்தது. வேவுக் கடமையிலும் இவனது ஆளுமை மிளிர்ந்தது.

இத்தாக்குதலுக்காக எதிரியின் நிலைகளை நோக்கி இவன் சக போராளிகள் ஊர்ந்து முன்னேறி நிலையெடுக்கின்றனர். தளபதியின் கட்டளை பிறக்கிறது. எதிர்பாராத தாக்குதலில் எதிரிப்படையினர் நிலைகுலைந்து போயினர். நிதானிப்பதற்குள்ளாக குண்டுபட்டு வீழ்கின்றனர். எறிகணைகள், உலங்கு வானூர்திகள் உக்கிரம் கொண்டு எமது நிலைகளைத் தாக்குகின்றன. குண்டுவீச்சு விமானங்கள் எமது முன்னேற்றத்தைத் தடுக்கப் பகீர தப்பிரயத்தனம் செய்கின்றன. ஆயினும் இவர்கள் எதிரிப்படையின் நிலைகளை அழித்தனர். மினிமுகாமைக் கைப்பற்றினர். எதிரிப்படையினர் தமது ஆயுதங்களை வீசிவிட்டு காயமுற்ற தமது சகாக்களைத் தோளில் சுமந்தவாறு ஓட்டமெடுத்தனர். அவர்களது நிலைகளைக் கைப்பற்றி எமது நிலைகளை நோக்கி மீளுகையில் வந்ததொரு குண்டு இவனது உடலைப் பதம் பார்க்கிறது. குருதியாறு நிலத்தை நனைக்கிறது. அவனது தினக்குறிப்பு வரிகள் குரலிலேயே நெஞ்சில் ஒலிக்கிறது! தமிழா நீ பிறவி எடுத்தாலும் நீ பிறந்த மண்ணுக்காய் ஒரு துளி இரத்தத்தைக் கொடுத்துவிட மறந்துவிடாதே தமிழா!

மாவிட்டபுரம் மினிமுகாமைத் தகர்த்து வீரசாதனை புரிந்தவர்களில் ஒருவனான இவன் தனது விழுப்புண் ஆறுமுன்னே அடுத்த சமர்க்களத்தில் குதித்தான். 19.02.1991 அன்று கட்டுவனில் சிறீலங்காப் படையினருடனான கடுஞ்சமர். முன்னேற முயல்கின்றனர் எதிரிப்படையினர். தடுத்து நிறுத்துவதில் இவனது துப்பாக்கியும் சுறுசுறுப்பாய்த் துரிதமாய் இயங்கியது.

05.02.1991 அன்று நடந்த தச்சன்காடு மினி முகாம் மீதான தாக்குதலிலும் இவனது பங்கு, பணி அளப்பரியது.

சகதோழர்கள் மேல் இவன் காட்டுகிற கரிசனை அபாரம். அவர்களை வழிநடத்துகின்ற ஆற்றலை அவர்களே புகழ்ந்துரைப்பார்கள். இராணுவம் முன்னேறி வந்த ஒரு தடவை இவனது குழுவைச் சேர்ந்த ஒருவன் அசட்டையாக எழுந்து நின்று அவதானித்தான். இவன் கண்டிப்பும் அன்பும் கலந்த தொனியிற் சொன்னான், எவ்வளவு கஷ்டத்துக்கு மத்தியில் ஒவ்வொரு போராளியையும் அண்ணை உருவாக்கி வைச்சிருக்கிறார். நீ என்னெண்டா சும்மா மண்டையைப் போடுறன் எண்டு எழும்பி நிக்கிறாய்! இந்தச் சிறுவயதிலேயே தலைமைக்கு விசுவாசம் மிக்கவனாக ஒவ்வொரு போராளியினதும் பெறுமதி உணர்வாகத் தன்னை நிலைநிறுத்தியிருந்தான். பங்குபற்றிய அனைத்துத் தாக்குதலிலுமே



படிப்பகம்

www.padippakam.com

மிக நிதானத்துடனும், திறமையுடனும் செயற்பட்டுத் தளபதிகளின் பாராட்டுதல்களுக்கும் அன்புக்கும் பாத்திரமாகி விட்டான்.

இவனைச் சார்ந்ததால் எத்துணை பெருமை அம்மாவிற்கு, கல்விச்சாலைகளிற்கு...

இவனது தாயகத்தின் மீதான தணியாப்பற்று, சுதந்திரத்தின் மீதான தீராக் காதல், உறுதி அம்மாவின் சிந்தனையிலும் சீரிய கருத்துக்களை விதைத்துவிட்டது. தன் பிள்ளைகளுக்கு மட்டுமே அம்மா என்று குறுகி நிற்காது எல்லாப் போராளிகளுக்குமே நான் அம்மா என்று எண்ணக்கூடிய உன்னத நிலைக்குத் தாயை உயர்த்திவிட்டான். மருத்துவ மனையிற் சிகிச்சை பெற்று வந்த எல்லாப் போராளிகளுமே அவரை அம்மா அம்மா என வாயும் மனமும் நிறைய அழைப்பார்கள். தலையை வருடி, காற்று விசுக்கி பாசத்தால் அவர்களைப் பராமரித்தார். வைத்தியர்களோ, பெற்றோரோ, சகோதரர்களோ சில நேரம் வராவிட்டாலும் இந்த அம்மா ஒருபொழுதுமே வரத்தவறியதில்லை.

மாவீரனின் தாய் என்ற நியாயமான நிமிர்வு இந்த அம்மாவிடம் நிறைய இருந்தது. வாணன் வள்ளுவன் வாக்கைச் செழுமைப் படுத்தி, ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகன் மாவீரன் எனக்கேட்ட தாய் என வளர்த்தெடுத்துவிட்டான்.

கல்விச்சாலைகள், எமது கல்விமான்களை உருவாக்குகின்றதே அன்றிக் கவரிமான்களை உருவாக்குவதில்லை என்பது பெரிய குறை. ஆயினும் நற்சிந்தனையால் பகுத்தறிவுகொண்ட தன்மான மறவர்கள் எம்மண்ணில் வாழவே செய்கின்றனர். அவர்கள் விடுதலை வீரர்கள்! இவர்களுள் ஒருவனைத் தம் மாணவனாய் கொண்டதில் பெருமையடைகின்றன கல்விச் சாலைகள். ஆம் வாணன் எமது பழைய மாணவன் என இறுமாந்து நிமிர்கின்றன உரும்பிராய் வைசத் தமிழ் வித்தியாலயமும் உரும்பிராய் இந்துக் கல்லூரியும்.

24.12.91 இது மிகத் தன்நலக்காரத் தினமோ? இத்தனை புகழ்பூத்த எம் வாணனை தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டதே...

பாரிய வெடியோசைகள் வலிகாமம் கிழக்கின் தலையில் வடிகின்றது. அந்தக் காலை இவ்வாறுதான் தொடங்கிற்று! இப்பிரதேசத்து ஈவினைப் பகுதி மண்ணின் இயல்பான செம்மை எம்மவர் குருதியால் மேலும் சிவப்பேறி... மூவர் விதையாகுகின்றனர். எதிர்பாராத கந்தக வீச்சில் மாசுற்ற எம் சூழல் காற்று இவர் தம் இறுதி மூச்சால் தூய்மை பெறுகிறது. இந்த மூவருள் ஒருவன்தான்... வாணன்!

ஓ... கேட்கிறது உனது ஆத்மராகம். அதுதான் உனது தினக்குறிப்பேடு.

வீரத்திற்கு வித்திட்ட தமிழா
கோழைக்குக் குடை பிடிக்கலாமா
கூடாது எமது இழப்புக்கள்
இழப்பு அல்ல' விடுதலை என்னும்
பயிருக்கு இடப்பட்ட உரமே
எமது இலட்சியம் ஓங்குக

உனது குறிப்பேடு, வெறுங் கையேடல்ல. பின் தொடர்ந்து வரும் இளைய வீரர்களுக்காய், தாயக மக்களுக்காய் நீ எழுதிவைத்த மரண சாசனம். அது புனிதம் மிக்கது. ஏனெனில் உனது புகழுடலின் சட்டைப்பையிலிருந்து அதை நாம் எடுத்தபோது அதுவும் குருதியில் குளிப்பாட்டப்பட்டிருந்தது. அதன் உயிர்ப்பும் துடிப்பும் மிக்க வேத வாக்கியங்களை என் உதடுகள் உச்சரித்துக்கொண்டே இருக்கின்றன.

- துஷ்யந்தன், *நன்றி:* எரிமலை 26.03.1994





படிப்பகம்





# லெப்டினனன்ட் ரவிக்குமார்

மீன்பாடும் தேன்நாடு என்று பேர்கொண்ட எமது மட்டக்களப்பின் இந்த வாவிக்கரையில் நின்று, இந்த மீன்களின் ரீங்காரத்தை எத்தனை நாள் ரசித்திருப்போம். இன்று நீயில்லாமல் நான் தனியே நிற்கையில், மீன்கள் பாடும் அந்த மெல்லிய ஒலிகூட சோக இசையாகவே தோன்றுகிறதே!

போன திங்கட்கிழமை உன்னையும், உன் தம்பி அன்ரனியையும் இழந்த அந்தச் சம்பவத்தை நினைத்தால் ஏற்படும் ஏதோ இனம்புரியாத உணர்வு, ஆத்திரத்தில் எம்மை நிதானமிழக்கச் செய்துவிடுமோ என்று கூட அஞ்சுகின்றேன்.

அன்று நான் தடுக்கத் தடுக்க குளித்துவிட்டு உடனே வந்து விடுகின்றேன் என்று சொல்லி விட்டு உனது தம்பியுடன் போனாய். தம்பியுடையான் சண்டைக்கஞ்சான் என்கிற பழமொழிதான் அப்போது எனக்கு நினைவுக்கு வந்தது. அன்று எனது தேகநிலை நன்றாக இருந்திருந்தால், எப்படியும் என்னால் முடிந்தவரை உன்னைக் காப்பாற்றியிருப்பேன்.

குளித்துவிட்டு இன்ன வீதியால்தான் வருவாய் என்பதை அந்த மாபாவி விபரமாக தகவல் அனுப்பியிருக்கின்றான். உள்வீதியாலும், பிரதான வீதியாலும் நீயும், உன் தம்பியும் சுற்றிவளைக் கப்பட்டுவிட்டீர்கள் என்பதைக் கேள்விப்பட்டதும், ஒவ்வொரு தாக்கு தலிலும் மின்னிய உனது வீரமே என் நினைவுக்கு வந்தது. அதிரடிப் படையினருக்கு ஏதோ கஷ்டகாலம் என்றுகூட நினைத்துக் கொண்டேன்.

www.padippakam.com

காயமடைந்த உன் தம்பியின் அருகில் நீ ஓடியதும் அண்ணா நீ தப்பிவிடு என்று சொல்லவும், அதைக் கேளாமல் நீ அவனைத் தூக்கிக் கொண்டு ஓடும்போது காயப்பட்டாய். சந்தியில் அதிரடிப்படையினர் உங்களை நெருங்கவே, அண்ணா என்னைச் சுட்டு விடு எனக் கெஞ்சியபோது... ஆண்டவனே! உன் உடன்பிறப்பு அன்ரனியின் தலையில் நீயே...! ஓ எனக் கதறிய நீ சயனைட்டைக் கடித்துவிட்டு, ரவைகளை முடித்து, உனது பிஸ்ரலை ஆற்றுக்குள் வீசி எறிந்த சம்பவம் பற்றி, அச்சம்பவத்தை நேரில் கண்டவர்கள் விபரித்தபோது, விடுதலையே...! உனக்காக எத்தனை துயரங்களைத்தான் எம்மனதில்
ஏற்ற வேண்டியுள்ளது என எண்ணிக்கொண்டேன்.

காப்பிலித் தோற்றம் கொண்ட முரட்டுக் குழந்தையான நீ அழுததை கல்லடியில் எவருமே கண்டிருக்க மாட்டார்கள். பாடசாலையில் உனது தம்பிக்கு யாராவது அடித்துவிட்டால், அவர்களை அடித்து உருட்டி துவம்சம் செய்துவிடுவாயே! நீ அடித்து நொருக்கிய கதிரைகள் தான் எத்தனை!

அவ்வளவுக்கு பாசம் வைத்திருந்த உனது தம்பியை நீயே எமனுலகம் அனுப்பியதையும், பகைவரிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதில் நீயும், உன் தம்பியும் காட்டிய மன உறுதியை நினைக்கையிலும், தம்பியை இழந்த நிலையிலும், எமது இயக்க ஆயுதம்எதிரிகளிடம் சிக்கக் கூடாது என்பதற்காக அதை ஆற்றில் வீசி எறிந்த நிதானத்தை நினைக்கையிலும், தாங்க முடியாத வேதனைகளுக்கு மத்தியிலும் எம்மனதில் வைராக்கியம் மேலோங்குகிறதடா!

இவையெல்லாம் தலைவர் எமக்கு ஊட்டி வளர்த்த விடுதலை உணர்வின் வெளிப்பாடே...

மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டாவது தலைவரை ஒழித்துவிட்டதாக லங்காபுவத் பெருமையடித்துக் கொண்டது. ஆனால் எத்தனை ரவிக்குமார்கள். எத்தனை அன்ரனிகள் மீண்டும், மீண்டும் இந்த மண்ணில் மலர்வார்கள் என்பதை அது சொல்லப்போவதில்லை. நாளைய வரலாறு இந்த உண்மையை நிச்சயம் உணரத்தான் போகின்றது. அதுவரையில் நான் உயிருடன் இருப்பேனோ என்னவோ?

வழக்கத்தில் படுவான்கரையிலிருந்து கல்லடிக்குத் தோணியில் வரும்போது எவ்வளவு திட்டங்களையெல்லாம் கதைத்துக் கொண்டு வருவோம். இன்று இந்த வாவியிலே தோணியை வலித்துக் கொள்ளும்போது, எனது இதயமும் சேர்ந்து வலிக்கிறதடா!

ஆற்றிலே நாம் கதைத்தவை ஆற்றோடு போகாமல் அவற்றை அபார சாதனைகளாக்கக் காத்திருக்கிறேன்... கொஞ்சம் பொறு!



படிப்பகம்



# லெப்.கேணல் நவம்



இராணுவப் பரிசோதனை ஒன்றின்போது கையை இழந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட் டிருக்கின்றான் ஒரு போராளி. வருவோர் போவோர் எல்லாம் அவனுக்கு ஆறுதலும், அனுதாபமும் தெரிவிக்கின்றனர். அது அவ னுக்கு சினத்தை மூட்டுகின்றது. இறுதியாக அவனது தாய் வருகின்றாள். நீ போராடியது போதும். இனி உனக்கு ஒரு கையில்லை. வீட்டிலேயே இரு. பாசத்தின் மேலீட்டால் இப்படி யொரு கோரிக்கை விடுகின்றாள் தாய். அது அவனது மனக்கொதிப்பை அதிகரிக்கின்றது. தனக்கு அனுதாபம் கூறவந்தவர்களுக்கு சொல்ல வேண்டியதைச் சொல்ல இதுதான் தருணம் எனத் தீர்மானிக்கின்றான்.

எனக்கு இன்னொரு கை இருக்கு. உறுதியுடன் தெளிவாக ஒலிக்கின்றது அவனது வார்த்தை கள். அவனுக்கு ஆறுதல் கூற முனைந்தவர் களும் தமது நிலையை எண்ணி நாணுகின்றனர். கால் இழந்த போராளிகளுக்குக் கிட்டு எப்படி நம்பிக்கை நட்சத்திரமாக, வழிகாட்டியாக திகழ் கின்றாரோ அதே போலத்தான் போராட்டத்தில் தமது கரங்களை இழந்த போராளிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றான் அவன். அவன் தான் டடி.

டடி-நவம் வன்னிக் காடுகளின் மூலை முடுக்கு கள் எல்லாம் இவனுக்கு அத்துப்படி. இக்காடு கள் பற்றிய படம் இவன் நெஞ்சில் நிறைந் திருக்கும். இவன் பிறந்தது மலைப்பிரதேசத்தில். போராடியது வன்னிக் களங்களில். வன்னியை நேசித்த... வன்னிக்களத்திலே காயமுற்ற இவனது உயிர் பிரிந்தது தமிழகத்தில்.

www.padippakam.com

பசிலனையும், லோறன்சையும் சேர்த்தால் அதுதான் நவம். இவனுடன் நெருங்கிப் பழகிய ஒரு போராளி கூறிய வார்த்தைகள் இவை. ஒவ்வொரு போராளிக்கும் தனித்துவமான சில ஆற்றல்கள் இருக்கும். துணிச்சலுக்குப் பெயர் போனவன் பசிலன். சிறந்த மதிநுட்பத்திற்குப் பெயர் போனவன் லோறன்ஸ். இருவரது தன்மைகளையும் ஒருவரிடத்தில் கண்டதால் தான் நவத்தைப்பற்றி அப்போராளி இவ்வாறு குறிப்பிட்டான்.

அதிதியாக வந்தோரால் அகதியாக ஆக்கப்பட்டதுதான் மணலாற்று மக்களின் வரலாறு. இன்றோ தமது சொந்த நிலத்தை தாமே பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுடன் நிற்கிறார்கள் மணலாறு மக்கள். வரலாற்றில் இந்நிலையை ஏற்படுத்தியதில் கணிசமான பங்காளிகள் நவமும் அவனது தந்தையுமே. எப்போதும் துப்பாக்கியுடன் காணப்படும் ஓமர்முக்தார் என்று போராளிகளால் அழைக்கப்படும் இவனது தந்தையும் இவனும் இந்த மண்ணை விட்டு நாம் எங்கும் போவதற்கில்லை என்ற செய்தியை ஸ்ரீலங்கா அரசிற்கு அடிக்கடி உணர்த்தினார்கள்.

அரசன் ஒருவன் தான் கைப்பற்றும் பிரதேசங்களைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருப்பதற்கு அவனுக்கு உதவுவது அங்கு அவன் விட்டுச் செல்லும் அவனது இராணுவமுகாம்கள் அல்ல. இதைவிட அவன் தனது பிரதேசத்து மக்களை அங்கு குடியேற்றுவதன் மூலம் சிறப்பாகச் செய்யலாம். காரணம் அங்கு குடியேறும் மக்கள் அங்கு நிரந்தரமாக வசிக்கப்போகிறவர்களாதலால் அவர்கள் எவ்வித இடர்களையும் எதிர்கொள்ளவும், அவ்விடங்களைத் தமதாக்கிப் போராடுவதற்கும் தயாராக இருப்பார். இது இளவரசன் என்னும் நூலில் காணப்படும் மாக்கிய வல்லியின் கூற்று. இதை அப்படியே நடைமுறைப்படுத்தியதால் தான் இன்று அம்பாறை என்றொரு தொகுதியே முழுச்சிங்களத் தொகுதி என்றாகிவிட்டது. இதையே படிப்படியாக திருமலை, மணலாறு என விஸ்தரித்து வருகின்றது சிறிலங்கா அரசு. ஆனால் இது தமிழீழ மண் என்று எல்லை போட்டுக்காட்டியது நவத்தின் துப்பாக்கி. குடியேற்றக்காரர்கள் என்பது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் ஒரு வடிவமே என்பதை இவன் உணர்ந்து அதுக்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டபடியால் இன்னொரு ஓதியமலை வரலாறு மீண்டும் நிகழாது தடுக்கப்பட்டது.

நெருக்கடி மிகுந்த காலகட்டங்களான, எங்கும் இந்திய இராணுவமணம் வீசிய அந்த நாட்களில் இயக்கத்தையும், இயக்கத் தலைமையையும் பாதுகாக்க இவன் மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் பற்றி இவனுடன் பழகிய ஒவ்வொரு போராளியும் கண்கள் பனிக்க கதைகதையாகக் கூறுகின்றனர். சூழலுக்கேற்ற மாதிரியும், மக்களுக்கேற்ற மாதிரியும் அமைந்த இவனது ஒவ்வொரு செயலும் போராட்டம் பற்றிய தெளிவை புதிதாகப் போராட்டத்தில் இணைந்துகொள்ளும் இளைஞர்களுக்கும், சிறுவர்களுக்கும் ஊட்டியது. நெருக்கடியான காலகட்டத்தில் பதட்டப்படாமல் செயற்படும் துணிவை சகபோராளிகளுக்கு ஊட்டினான். காட்டில் நவம் நிற்கும் பகுதி ஒரு பாதுகாப்பு வலயம் என்றே கூறலாம். அந்தளவுக்குச் சிறந்த முறையில் ஒரு ஒழுங்கமைப்பை உருவாக்கியவன் அவன்.

ஒற்றைக்கையால் இவன் செய்யும் வேலைகளைப் பார்த்த ஒவ்வொருவருக்கும், இவனால் இது முடியுமானால் என்னால் ஏன் முடியாது என்ற தன்னம்பிக்யையை ஊட்டியது. அவ்வாறு உருவான போராளிகள் தான் இன்று வன்னி மண்ணைக் காத்து நிற்கின்றனர்.

கணக்கற்ற களங்களைக்கண்ட இவனை நாம் இழந்தது உண்மைதான். ஆனால் இவனால் ஊட்டப்பட்ட ஒழுங்கமைப்பு, போராட்ட உணர்வு எதையும் மணலாறு மண் மறந்துவிடவில்லை. அவ்வப்போது மணலாறு பிரதேசத்தில் எதிரியிடமிருந்து இவனால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் திரியும் போராளிகளும், ஊர்காவல் படையும் சொல்லும் செய்தி இதுதான்.




படிப்பகம்

www.padippakam.com

# மேஜர் சிட்டு





எங்கள் மண்ணில் பாடித்திரிந்த குயிலை, எல்லோரின் மனங்களையும் தன் குரலால் வசப்படுத்திய பாடகனை, காலத்தில் தன்னைப்பதிய வைத்த கலைஞனை, எங்கள் உணர்வுகளோடு ஒன்றிவாழ்ந்த போராளியை நாங்கள் இன்று இழந்து போனோம். சிட்டு, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் யாழ்மாவட்டப் பொறுப்பாளராகவும் புலிகளின்குரல் வானொலியின் பொறுப்பாளராகவும் பணியாற்றியவர். அக்காலப்பகுதியில் பல கலைஞர்களை போராட்டத்துடன் இணைத்து பல நிகழ்ச்சிகளை உருவாக்கினார். போராட்டத்தின் அவசியத்தையும் போராட்டக் கருத்துக்களையும் மக்களிடத்தில் எடுத்துச் சொல்ல கலைகளினூடாகச் செயற்பட்ட சிட்டு, தானும் ஒரு கலைஞனாகப் பரிணமித்தார். தமிழீழத்தின் மிகச்சிறந்த குரல்வளம் மிக்க பாடகராக பல பாடல்களைப் பாடித் திகழ்ந்தார். இயல்பாக அமைந்த ஞானத்தை மேலும் வளர்த்த முறையால் எங்கள் தேசத்தின் முதன்மைப் பாடகராக மாறினார். ஈழத்திலே அண்மைக்கால பாடகர்களில் தனக்கு நிகராகத் தானே என்ற வகையில் இவரே இருந்தார். பாடல்வரிகளின் பொருளுணர்ந்து, அந்த உணர்வை இசையுடன் இணைத்துப் பாடியவர் இவர். கிராமியப் பாடல்களுடனும் கடலோர வாழ்வோடும் உறவாகி தன் இளமைக்கால அனுபவங்களைப் பெற்றிருந்த சிட்டு, அவற்றை தன் இசைக் கோலங்களில் அருமையாக வரைந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழீழத்தின் தலைசிறந்த இசையமைப்பாளர்களின் இசையில் 70 பாடல்களைப் பாடிய இந்த இசைக்குயில், தனது பாடும் திறமையை, தமிழீழ விடுதலைக்காக விசுவாசமாக அர்ப்பணித்திருந்தது. தமிழீழ இசைத்துறையில் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு என, பாடலாசிரியர்களும் இசையமைப்பாளர்களும் ஏங்குகின்றனர். இயல்பாகவே இவரிடம் அமைந்துவிட்ட இசைஞானம், தமிழீழ மக்களின் உணர்வுகளை, வெளியுலகுக்கு எடுத்துச் சென்றது. வெள்ளிநிலா விளக்கேற்றும் நேரம் என்ற பாடலில் ஒரு சிறந்த பாடகன் என்பதை முத்திரை குத்திய சிட்டு அவர்கள் அதனைத் தொடர்ந்து தளராத துணிவோடு களமாடினாய். கண்ணீரில் காவியங்கள், பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது, சின்ன சின்ன கூடு கட்டி என பல்வேறு அற்புதமான பாடல்களை இசைத்துள்ளார். இவரின் குரலில் இழையோடிய சோகம் தமிழீழம் தனது விடுதலைக்காக கொடுக்கும் விலையினை இசையின் பதிவாக்கியது. தான் பாடிய பாடல்களுக்கேற்ப போர்களத்தில் சமரிட்டு 01.08.1997 அன்று வீரச்சாவடைந்தார். எங்கள் மனசோடு ஒன்றிய இந்தப் போராளிப் பாடகரை இழந்த துயரம் நம் இதயத்தில் பெருங்காயமாக உறைந்து போயிருக்கிறது.




படிப்பகம்

www.padippakam.com



# லெப். கேணல் பாவரசன்




சிரித்தமுகம், எப்போதும் செயற்படும் கரங்கள், மண்ணையும் மக்களையும் போராட்டத்தையும் நேசிக்கும் மனம். இவ்வாறு செயற்பட்ட ஒரு போராளியை, ஒரு கவிஞனை இன்று நாம் இழந்துவிட்டோம். பைப் என்றழைக்கப்படும் பாவரசன் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நீண்டகால உறுப்பினர் கேணல்.கிட்டு அவர்கள் யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த காலத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கெதிரான பல தாக்குதல்களில் பங்குபற்றியவர் பாவரசன். இவ்வாறான ஒரு சமர்க்களத்தில் தன் ஒரு காலை இழந்த போதும், பாவரசன் இன்னும் முனைப்போடு போராட்டத்துடன் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டார். சமர்க்களங்களைவிட இலக்கியத்திலும் பாவரசனுக்கு ஆர்வமிருந்தது. போராட்டத்துடன் மக்களை இணைத்து, இனவாத அரசுக்கெதிராக அவர்களை எழுச்சி பெற வைக்க வேண்டுமென்பதில் பெருவிருப்பங்கொண்ட பாவரசன் அதற்காக பல கவிதைகளையும், இசைப்பாடல்களையும் எழுதியுள்ளார். அவருடைய பாடல்கள் போருணர்ச்சியும் வீரத்துடிப்பும்மிக்கவை. வெளிச்சத்திலும் இவர் கவிதைகள் பிரசுரமாகியுள்ளன. பழகுவதில் இனிமையும் பண்பும் நிறைந்த பாவரசன் 10.09.1997 அன்று ஜெயசிக்குறு படை நடவடிக்கையில் வீரச்சாவடைந்தார். இந்தசடுதியான இழப்பு எல்லோர் மனங்களிலும் மாறாத ஓர் ஆழமான நினைவுத் தடயமே.



படிப்பகம்

www.padippakam.com



# கப்டன் பிரசன்னா

அமைதியான சுபாவம், ஆழமான நிதானமும் கூடிய செயற்பாடுகள், எப்போதும் இசையிலும் நடனத்திலும் ஈடுபடும் ஆவல், எல்லோரிடமும் கலையையும் போராட்ட உணர்வையும் தூண்டிவிடும் முனைப்பு-இந்த அடையாளங்களுடன் தான் பிரசன்னா தன் இறுதிக்கணம் வரையும் இருந்தார். போராட்டச் செயற்பாடுகளுடன் நடனக்கலையிலும் தேர்ந்த பிரசன்னா இயக்கத்தினுள் தன் சகபோராளிகளிடம் நடனக்கலையை வளர்க்கும் ஆர்வத்துடன் உழைத்தவர். புகைப்படங்கள் பிடிப்பதிலும் இவர் வல்லவராயிருந்தார். போர்முனைகளில் இவர் பிடித்த படங்கள் யுத்தக்களத்தில் எங்களின் புலிவீரர் சாதித்த வெற்றிகளின் சாட்சியங்களே! சாவின் விளிம்பில், மயிரிழையில், மிகத்துணிச்சலுடன் இவர் எடுத்த படங்களில்கூட கலையழகு நேர்த்தியாக இருக்கும். இவையெல்லாமிருந்த போதிலும் பிரசன்னாவுக்கு நடனக்கலையில் தனது அரங்கேற்றம் பற்றிய ஆவலே எப்போதும் உள்ளோடியிருந்தது. 1995ல் யாழ் இடப்பெயர்வுக்குச் சில நாட்களுக்கு முன் பிரசன்னாவின் நடன அரங்கேற்றத்துக்கு ஏற்பாடாகியிருந்தது. எல்லா ஒழுங்குகளும் பூர்த்தி என்ற நிலையில்தான் வலிகாமத்தில் சண்டை தீவிரமானது. அரங்கேற்றம் இடைநிறுத்தப்பட்டது. பிரசன்னா யுத்த களத்திற்குப் போய்விட்டார். வன்னியில் ஒரு சிறு கிராமத்தில் பிறந்து வளர்ந்த பிரசன்னா, யாழ்ப்பாணத்தை சிங்களப்படை ஆக்கிரமித்தவேளை அதை எதிர்த்து அங்கே சென்று போரிட்டார். இவ்வாறான ஒரு வீரமிகு சந்தர்ப்பத்தின்போது 17.07.1997 அன்று பிரசன்னா வீரச்சாவடைந்தார். இடைநின்றுபோன பிரசன்னாவின் அந்த நடன நிகழ்ச்சி நடக்காமலே போனது பெருந்துயரமே!



படிப்பகம்

www.padippakam.com

# கப்டன் கல்யாணி




திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1989ம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்ட இவர் கொக்காவில், மாங்குளம், பலாலி, சிலாவத்துறை தாக்குதல்களில் பங்கேற்றவர். சிலாவத்துறைத் தாக்குதலில் தனது இடது கண்ணை இழக்க நேரிட்டது. இதனைத் தொடர்ந்து நவம் அறிவுக்கூடத்தில் வீடியோப்பயிற்சி பெற்று சிறந்த படப்பிடிப்பாளரானார். ஓயாத அலைகள், பரந்தன் தாக்குதல், புளியங்குளம் தாக்குதல் போன்ற களங்களில் படப்பிடிப்பாளராக வீரஞ் செறிந்த போர்க்களக்காட்சிகளை படமாக்கினார். 1997 ஒகஸ்ட் 1ம் திகதி ஓமந்தை தாக்குதலில் இவர் வீரச் சாவடையுமுன்னர் இவரின் "வதையின் கதை" என்ற குறும்பட முயற்சி முற்றுப் பெற முடியாமல் போனது கவலைக் குரியது.



படிப்பகம்

www.padippakam.com




# லெப். அரசு

1993ம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்துகொண்ட லெப்.அரசு நிதர்சனப் படப்பிடிப்பாளராகவே தனது பணியினை தொடர்ந்தார். சுறுசுறுப்பாகவும், இளமைத்துடுக்கும் நிரம்பப்பெற்ற இவரின் படப்பிடிப்பு இடர்மிகுந்த சூழலிலும் லாவகமாக அமைந்துவிடும். பல்வேறு சண்டைக்களங்களில் தனது முத்திரையைப் பதித்துச் சென்ற லெப்.அரசு 1996ம் ஆண்டிலிருந்து திருமலை மாவட்ட படப்பிடிப்புக்காகச் சென்றார். திருமலை மாவட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு தாக்குதல்கள் இவரின் கமராவில் பதிவாகின. 1997 ஒகஸ்ட் 12ம் திகதி திருமலை மாவட்டத்தில் இடம்பெற்ற சமர்க்களத்தில் படப்பிடிப்பாளனாகவே வீரச் சாவடைந்தார். ஒரு சிறந்த படப்பிடிப்பாளனாக பரிணமிக்க வேண்டிய லெப்.அரசுவின் மறைவை அவர் விட்டுச்சென்ற வீடியோ ஆவணங்கள் என்றும் நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.




படிப்பகம்

www.padippakam.com

# கப்டன் ஜீவன்


1990ம் ஆண்டு விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொண்ட கப்டன் ஜீவன் படப்பிடிப்பாளனாக இருந்த போதிலும் வன்னியில் இடம்பெற்ற பல்வேறு சமர்க் களங்களில் பங்கேற்றார். பூநகரிச் சமர், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை போன்ற களங்களைச் சந்தித்து மூன்று தடவைகளுக்கு மேல் காயமடைந்தார். சிறீ லங்கா படைகளின் சத்ஜெய 1,2,3 சண்டைகளில் படப்பிடிப்பாளனாக பாராட்டுப்பெற்றவர். கிளிநொச்சி, உருத்திரபரம் பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதலை படமாக்கியவர். நகைச்சுவை நிரம்பிய பேச்சினால் எல்லோரையும் கவர்ந்துவிடும் கப்டன்.ஜீவன் படப்பிடிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். பாடகர் மேஜர் சிட்டுவை தானே இறுதியாகப் படமாக்கினேன் என மேஜர் சிட்டுவின் வீரச்சாவு நிகழ்வின்போது கண்ணீர் மல்க கூறியபோது தனது வீரச்சாவும் இரண்டு கிழமைகளின் பின்னால் நிகழப்போகிறது என்பதை அறிந்திருந்தாரோ என்னவோ. நான் வீரச்சாவடைந்தால் எனது உடலைப் படப்பிடிப்பு பொறுப்பாளர் வீட்டில் வைத்து அல்லது இந்த முகாமில் வைத்துவிட்டு துயிலும் இல்லத்துக்கு கொண்டு போங்கள் எனக்கூறி வைத்தார். அது அவரின் வழமையான நகைச்சுவையாக நண்பர்கள் கருதினார்கள். ஆனால் அது உண்மையாகிப்போய்விட்டது. புளியங்குளச்சமரில் 1997 ஓகஸ்ட் 17ம் திகதி கப்டன். ஜீவன் படப்பிடிப்பின்போது வீரச்சாவைத் தழுவினார்.





படிப்பகம்

www.padippakam.com






# மேஜர் பாரதி

வடமராட்சியில் உள்ள கல்லுவத்தின் செம்பாட்டு மண்ணில் இருந்து புதிய புறம் பாடப் புறப்பட்ட வீரவேங்கை இவள்.

அந்நிய ஆதிக்கம் எம்மண்ணிலே விளைத்த கோரப்பதிவுகளைக் கண்டு கொதித்தெழுந்து, தாயகவிடுதலைக்காய் தம்முயிர் ஈந்த மாவீரர் வரிசையிலே இன்று இவளின் பெயரும்...

பாரதி: இவள் குடும்பத்தில் ஒரேபிள்ளை செல்லப்பிள்ளை. தங்கள் உயிரினும் மேலாக பெற்றோரால் நேசிக்கப்பட்டவள், போதிக்கப்பட்டவள்.

வறுமையின் கோரப்பிடி இவளின் குடும்பத்தைப் பாதித்தாலும் அது அவர்களது இதயத்தைப் பாதிக்கவில்லை.

எந்தவிடயத்திலும் ஆற்றலும், அறிவும் பெறத்தக்க வகையிலே பெற்றோரால் வளர்க்கப்பட்டாள்.

பாராதி தன் தாயை மிகவும் நேசித்தாள். அதனால்தான் அவள் தன் தாய்நாட்டையும் மிகவும் நேசித்தாள்.

பெண்களை பூவையாக எண்ணி நகையாடிய காலத்திலே... புலியாகி களமாடி இன்று காவியமாய் தமிழீழ வரலாற்றிலே நிறைந்து நிற்கின்றாள்.

1986ஆம் ஆண்டு காலப்பகுதியிலே தனது பல்கலைக்கழகப் படிப்பை நிறுத்தி புலிகளின் போராட்டப்பாதையில் பாரதி தன்னை இணைத்துக் கொண்டாள்.



படிப்பகம்

www.padippakam.com

1987ஆம் ஆண்டு மகளிர் படையணியின் 2வது பயிற்சி முகாமுக்காக பெண்போராளிகள் தெரிவு செய்யப்பட்டபோது தானும் அதில் பயிற்சி பெற முடியவில்லையே என்று பாரதி மிகவும் மனவேதனைப்பட்டாள். எல்லோரும் பயிற்சிக்குப் போனால் தளத்திலே நின்று வேலைகளைக் கவனிப்பதற்கும் ஆட்கள் தேவை. நீங்கள்தான் அப்பொறுப்பை ஏற்றுச் செய்ய வேண்டும் என்று லெப்.கேணல் திலீபன் கூறியதற்கிணங்க பாரதி தனது மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள். மகளிர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து பெண்களைப் போராட்டத்துடன் இணைப்பதிலும், பெண்களது சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் வேலைகளிலும் பாரதி ஈடுபட்டாள்.

1987 ஆகஸ்ட் 10ஆம் திகதி இந்திய தமிழீழ விடுதலைப் போரைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கம் சகல நிலைகளிலும் வளர்ச்சியைப் பெற்றுக் கொள்கின்றது. வல்லரசொன்றுடன் மோதுகின்ற விடுதலைப் புலிகளின் தீரத்தையும் உலகம் கண்டு வியந்து நிற்கின்றது.

குண்டுதுளைக்காத நிலமென அங்குல நிலத்தையேனும் கண்டு கொள்ள முடியாத மணலாற்றுக் காட்டிலே புலிகளின் புதியபடையணிகள் வெகுவிரைவாக பயிற்சியைப் பெறுகின்றன. இக் காலகட்டத்தில் நடைபெற்ற மகளிர் பிரிவின் 4வது பயிற்சி முகாமில்தான் பாரதி பயிற்சியைப் பெற்றுக் கொண்டாள்.

இவள் பயிற்சிக்குச் சென்ற அந்த நாளை நினைத்துப் பார்க்கின்றேன்... இந்திய இராணுவம் இம்மண்ணில் நிலைகொண்டிருந்த காலம் அது. உண்பதற்குத் தவிர வாயைத் திறக்கவே அஞ்சிய நேரம் அது. இந்நேரத்தில்தான் பாரதியைச் சந்திக்கின்றேன்.

பயிற்சிக்கு போவமா? என்று கேட்கிறேன். எனது கையை அன்புடன் பற்றியவள் அக்கா இந்தமுறையும் என்னை ஏமாற்றமாட்டியள்தானே, கட்டாயம் அனுப்புவீங்கள்தானே என்று கேட்கிறாள். அதே நேரம் எனது கைகளில் இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுகிறது.

ஆச்சரியத்துடன் பாரதியின் முகத்தை நிமிர்ந்து பார்க்கிறேன்.

அக்கா நான் நல்ல தெளிவோடும் உறுதியோடும் இருக்கிறேன். இது பாரதியின் பதில். எனக்கு இன்னும் விடை பிடிபடவில்லை. இவள் ஏன் அழுகிறாள்?

இப்பொழுது அவளது நாட்குறிப்பை பார்க்கும்பொழுதுதான் அவள் அடிமனதின் ஆழத்தில் புதைந்திருந்த சோகம் தெரிகின்றது.

வயிற்றுப்பாட்டிற்கே வழியின்றி வாடும் ஓர் எலும்புக்கூடு அவளின் தாய், தன் செல்ல மகள் திரும்பிவருவாள் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்ற அந்த ஏக்கம் நிழலாடுகின்றது.

அவளின் இறுதிக்கிரிகைகளின்போது அழ மறந்துபோய் ஒவ்வொரு போராளிகளினதும் முகத்திலே தன் அருமை மகளை அடையாளம் காணத்துடிக்கிற அந்த தாயின் முன்னே... பேசுவதற்கு வார்த்தைகளற்றுப் போகிறோம்.

பாரதி, வானதி, கஸ்தூரி இவர்கள் மூன்று பேரும் ஒரே பயிற்சி முகாமிலே பயிற்சி பெற்றவர்கள். நெருங்கிய தோழிகள்.

இவர்கள் கையிலே இருந்த துப்பாக்கிகளுக்கு இருந்த வேகம் இவர்கள் கரங்களிலே இருந்த பேனாவுக்கும் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

ஒருபுறம் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராகப் போர் தொடுத்தது இவர்களது துப்பாக்கி. இன்னொருபுறத்தில் சகல ஒடுக்குமுறை சக்திகளுக்கும் எதிராக மக்களை விழிப்படையச் செய்வதில் இவர்களது பேனா பெரும் பங்காற்றியது.

இந்திய இராணுவத்தை இம் மண்ணில் இருந்து விரட்டியடித்த துப்பாக்கி வேட்டொலிகளில் எல்லாப் போராளிகளையும் போல பாரதியின் துப்பாக்கியோடு சேர்ந்து அவளது பேனாவுக்கும் கணிசமான பங்கு இருந்தது.

1990ம் ஆண்டில் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் பாரதி ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை.

தமிழீழ மாணவ சமுதாயம் சரியான செயல் நெறி ஒன்றுக்கூடாக வளர்த்துச் செல்லப்பட வேண்டும் என்பதில் பாரதி மிகுந்த அக்கறை கொண்டிருந்தாள்.

இந்நேரத்தில்தான் மீண்டும் ஸ்ரீலங்கா தமிழீழ விடுதலைப்போர் ஆரம்பமாகியது. இப்போரிலே மாணவர்களை முழுமையாக பங்களிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட பாரதி தானும் சண்டைபிடிக்க வேண்டும் என்று எம்முடன் சண்டையிட்டுக் கொண்டு களம் செல்கின்றாள்.

இராணுவக் காவலரண்களை அவதானிப்பதற்காக சென்றுகொண்டிருந்த வேளையில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காலில் காயமடைந்து கொள்கிறாள்.

மீண்டும் பெண்களின் சமூக மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களை வகுத்துச் செயற்பட்ட பாரதி மகளிர் முன்னணியின் துணைப்பொறுப்பாளராகவும் செயற்பட்டாள்.

பாரதியுடன் பழகுவது என்பது ஓர் வித்தியாசமான அனுபவம்.

இவள் இயற்கையை நேசிப்பவள். இயற்கையை ரசிப்பவள். இந்த இயற்கையிலே எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதை காணச்சகிக்காதவள்.

மாவீரர் நினைவில்லங்களில் கூட மலர் பறித்திட்டு வணக்கம் செலுத்துவதை இவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வேண்டுமானால் ஒவ்வொரு கல்லறைகளுக்கு அருகிலும் ஒரு நந்தவனத்தை உருவாக்குங்கள். அவை பூத்துச் சொரிந்து எம் வீரர்களை ஆராதிக்கட்டும் என்று கட்டளை இடுவாள். இவ்வாறான மிகவும் இளகிய மனதைக் கொண்ட இவளால் எம் தாயக மண் அங்குல அங்குலமாக பறிக்கப்படுவதை சகித்துக் கொண்டிருக்க முடியுமா? விடியலைப் பிரசவிக்க வித்தான மாவீரர் வரிசையிலே எங்கள் பாரதியும்...

பாரதி நீ விட்டுச் சென்ற ஆயுதத்தை ஏந்திக் கொண்டு ஆயிரமாயிரமாய் விடுதலைப் பாதையிலே வீரர்கள் அணிவகுக்கின்றார்கள். நீ பத்திரப்படுத்தி வைத்திருந்த உனது பேனா, அதை என் கைகளில் எடுத்துள்ளேன். இனி ஆயிரமாயிரமாய் இம் மண்ணுக்காய் தம் இன்னுயிரை அர்ப்பணித்த தோழர்களின் வரலாற்றை அது பதிவு செய்யும்.



படிப்பகம்

www.padippakam.com



# மேஜர் அழகன்

சொல்லின் முன் செயல் எனும் தலைவரின் கூற்றை தனது போராட்ட வாழ்வில் திறம்பட வெளிப்படுத்திய வீரவேங்கை மேஜர்.அழகன் (செல்வராசா இளங்கோ) 29.06.1992 அன்று வெற்றிலைக்கேணித் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். சிறந்த போர் வீரனாக மட்டுமன்றி ஈழநாதம் பத்திரிகையின் நிர்வாகப் பொறுப்பாளராகவும் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். மக்களோடு மக்களாய் இனவிடுதலைக்கு தன்னை அர்ப்பணித்த வீர வேங்கை அழகன் மறைந்த செய்தி அவருடன் பழகிய அனைவருக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அன்போடு பழகிய அனைவரும் அவரை அழகண்ணே என்று செல்லமாக அழைப்பதுண்டு. தானுண்டு தன்வேலையுண்டு என்று கருதுபவர்கள் எல்லாம் அவரது துணிச்சலை, ஆளுமையை, அவரது புன்சிரிப்பை தட்டிக்கேட்கும் மனிதாபிமான உணர்வை பெருமையாகப் பேசுவதுண்டு.

களத்திற்குச் செல்பவன் களத்திலே வீரமரணத்தை தழுவுவதுதான் அவனது இலட்சியம் என்ற உணர்வை சொல்லாமல் கொள்ளாமல் நிறைவு செய்துவிட்டாலும் அந்த அழகு என்னும் ஆளுமையை நாம் எங்குமே இனி காணமுடியாது.

பள்ளிக்கூட வாழ்விலே அவரது இனவிடுதலை உணர்வை கல்லூரி ஆசிரியர்கள் பெருமையாகப் பேசி அவரைப் புகழ்வதுண்டு. சாவகச்சேரி மண் விடுதலையின் விளைநிலம். விடுதலை வித்துக்கள் அந்த மண்ணிலே முதன்முதலாக தோன்றிய காலத்திலே இளைஞரான செல்வராசா இளங்கோவும் 1983ல் தன்னை விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைத்துக்கொண்டார். நீண்ட நெடும் பயணத்தில் மூத்த உறுப்பினராக பலகளம் கண்டவர் மேஜர்.அழகன். தலைவர்கள் கூட





படிப்பகம்

அவரை எப்போதும் வாஞ்சையுடன் செல்லமாக அழகு, அழகு என கொஞ்சி மகிழ்வதுண்டு. அவரது முகத்திலே இடர்பல வரினும் புன்னகை மறைவதில்லை. சிரித்துச் சிரித்து நிதானமாக பதில் சொல்வதே அவரது தனி அழகு.

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கு தனியான பத்திரிகையொன்று அமைக்கப்பட வேண்டுமென்று இந்திய அமைதிப்படை இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்தகாலத்தில் களத்திலே அவர் கனவு கண்டார். அவரது கனவை செயற்படுத்துவதற்கு தலைவர் வே.பிரபாகரனின் ஆணை கிடைத்தது.


அதற்கான முயற்சியை இந்தியப்படையை விரட்டிய சில நாட்களில் தமிழீழத்தில் நிறைவு செய்த செயல்வீரராக அவர் காணப்பட்டார். இரண்டு ஆண்டுகளாக செயல் வீரராக அப்பணியை நிறைவு செய்துகொண்டிருந்தபோது காலன் அவரைக் கவர்ந்தது எமது துரதிஷ்டமாகும்.

ஒருகையில் பேனாவுடனும்
மறுகையில் துப்பாக்கியுடனும்
போர்க்களத்தில் நின்று
எதிரியோடு நேருக்கு நேர் மோதி
அங்கு நிகழ்ந்தவற்றை
உண்மையை
பத்திரிகைக்கூடாக
மக்களுக்குச் சொல்லிய
ஒரு போராளிப்
பத்திரிகையாளன்தான்
மேஜர்.அழகன்

பத்திரிகைக்கான களத்தில் இருந்து செய்தி எடுத்து பிரசுரிக்க வேண்டுமென்ற துணிச்சல் இன்று நேற்று வந்ததில்லை. பல களங்களில் அவர் அப்பணியை திறம்பட நிறைவுசெய்தவர். கட்டைக்காடு இறுதிப்போர் அவரது இலட்சிய வெறியை தடுத்து எமக்கெல்லாம் சோகத்தை வரவழைத்து ஐயோ அழகண்ணே என வாய்விட்டுப் புலம்பவைத்துவிட்டது. அவரது பிரிவு தமிழீழ பத்திரிகைத்துறைக்கும் ஒரு பேரிழப்பாகும்.

www.padippakam.com





# லெப். கேணல் மல்லி

லெப்.கேணல்.மல்லி, விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவன்.

இவன் விடுதலைப்போராட்ட காலத்தில் பல களங்களில் தன் முத்திரையைப் பதித்தவன்.

இரு தேசங்களின் ஆக்கிரமிப்பு இராணுவங்களுடன் இவன் போராடினான். முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு எனும் இடத்தில் பிறந்தான். நீண்ட போராட்ட வாழ்வில் ஓயாது கடுமையாக உழைத்தவன். தனைவருத்தி தன்னொளி பார்த்தவன்.

அமைதிப் போர்வையுடன் வந்த இந்தியப் படைகள் முள்ளியவளையில் முகாம் இட்டிருந்தன. 1990ம் ஆண்டில் இம்முகாம் மீதான தாக்குதலில் பங்கேற்று நின்றான். இந்தக் காலப்பகுதியிலேயே அவர்களோடு கூட்டாக நின்ற கும்பல்கள், கிளிநொச்சி 18ம்



படிப்பகம்

போர் எனும் இடத்தில் முகாம் அமைக்க முற்பட்ட வேளையில் (E.N.D.L.F) அந்த தேசத்துரோகிகள் மீதான தாக்குதலில் ஈடுபட்டான்.

1990களில் கொக்காவில், முல்லைத்தீவு, மாங்குளம் என தொடர்ந்து வீழ்ந்த இராணுவ முகாம்களின் தாக்குதல்களில் முன்நின்றான்.


1991 ஆ.க.வெ என விடுதலைப் புலிகளால் பெயர் சூட்டப்பட்டு நடாத்தப்பட்ட ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல்களிலும், 1992ல் வண்ணாங்குள முகாம் தாக்குதல்களிலும் 1993ல் பூநகரி முகாம் தாக்குதல்களிலும் புயலென நின்றான். 1990ம் ஆண்டு மாங்குள முகாமிலிருந்து மல்லாவிப் பக்கமாக முன்னேற முயன்ற இராணுத்தினருடன் நேரடி மோதலில் நின்றான்.

சிலாவத்துறையில் இருந்து அளம்பில் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருடனான நேரடி மோதலில் குதித்தான்.

யாழ்தேவி எனப் பெயரிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை அது. கட்டைக்காட்டிலிருந்து புலோப்பளையை நோக்கி முன்னேற முயன்ற யாழ்தேவியை தடம்புரள வைத்தான். அன்பும் பண்பும் அகத்திருத்திய மனிதரைச் சுமந்து யாழ்தேவிவரின் வரலாமேயன்றி ஆக்கிரமிப்பு எண்ணங்கொண்டு எவரும் வருதல் இயலாது என்று எதிர் நின்றான். தாயை தாய்த் தேசத்தை தன் உயிரினும் மேலாகப் பூசிக்கின்றவன். போர் என்றால் நெஞ்சம் பூரித்து தோள்கள் வலுவுற நிமிர்ந்து நடந்தவன். எங்கள் தேசம் நிமிர்வுற நிமிர்ந்தவன்.

www.padippakam.com





# கப்டன் பிரான்சிஸ்

அன்பின் பிரான்சிஸ், எத்தனை வருடங்கள் ஓடிவிட்டன. ஆனாலும் உன் நினைவு மட்டும் எம்மை விட்டு ஓட மறுப்பது ஏன்? நீ உண்மையாக வாழ்ந்தாய் மட்டக்களப்பு மண்ணின் விடுதலைப் பண் பாடப்படும்போது உனது பெயர் இணைக்கப்படாமலிருக்க மாட்டாது. அந்தப் பண்ணின் ஆரம்ப வரிகளில் நிச்சயம் உனது பெயர் இருக்கும். அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன். நாங்கள் சைக்கிளில் திரிந்தது. ஆற்றில் தோணியில் பயணமாகியது. அந்தப் போர்க்களங்கள்... எல்லாமே இன்றுபோலிருக்கின்றன.
நீ மட்டும் அருகிலில்லை.

நீயும் நானும் டேவிட்டும் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு சைக்கிளில் எமது பிரயாணத்தைத் தொடங்கிய அந்த நாட்களை நினைத்துக் கொள்கிறேன். போகும்போது நீ என்னவெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தாய். உனது ஆசைகள் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றக் கூடியளவிற்கு அப்போது எம்மிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை. இரண்டே இரண்டு கைத்துப்பாக்கிகளுடனேயே எமது பயணத்தை ஆரம்பித்திருந்தோம். போகும் போதே வழியில் பரந்தனில் சிவதாஸன் என்ற துரோகிக்கும், வவுனியாவில் புளொட் இயக்கத்தினரைக் காட்டிக் கொடுத்த தர்மே என்ற சிங்களவனுக்கும் மரண தண்டனை வழங்கி விட்டுச் சென்றோம்.

காட்டுப் பாதைகளூடாக மதவாச்சிவரை மிதிவண்டியில் சென்றோம். அங்கிருந்து பேருந்திலும் புகையிரதத்திலும் சென்று மட்டக்களப்பு மண்ணை மிதித்தோம். அப்போது நீ என்ன சொன்னாய்? அப்பாடா... மட்டக்களப்புக்கு ஆயுதம் வந்திட்டுது' இனித்தான் ரைகேசிட விளையாட்டு துடங்கப்போகுது. இந்த வார்த்தைகளை நினைத்துக் கொள்கிறேன். இன்று போராட்டம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பார்க்கும்போது இரண்டு குழல் துப்பாக்கிகளின் சக்தி மிக அற்பமானதே. ஆனால் அவைதான் அங்கிருந்து ட்றக்டர் கணக்காக ஆயுதங்களை கைப்பற்றுவதற்கு வித்தாக அமைந்தன. யாழ்ப்பாணம் கோட்டை விடுவிக்கப்பட்டதற்கு மட்டக்களப்பு ஆயுதங்களின் பங்கும் ஒரு காரணமாக இருந்தது என்று கொக்கட்டிச் சோலையில் நியூட்டன் பேசும்போது நான் அந்த இரு குழல் துப்பாக்கிகளையும்தான் நினைத்துக் கொண்டேன்.



படிப்பகம்

www.padippakam.com

நாங்கள் மட்டக்களப்பு சிறையிலிருந்து நிர்மலாவை மீட்டுவந்த அந்தக் காட்சியை நினைத்துக் கொள்கிறேன். அது உனது இழப்பின் கொடுமையை எனக்கு புரியவைக்கின்றது. எப்படி இயங்கினாய் நீ. ஒரு பம்பரம்போல. சிறைச்சாலைக்கு வெளியில் நின்ற சிங்களக் காவலனொருவனை நாம் மடக்கி உள்ளே போகமுயற்சித்தோம். சிறைக்காவலர்கள் வேடத்தில் நாம் சென்றிருந்தாலும் கதவைத் திறந்த ஆரம்பத்திலேயே உள்ளே இருந்தவர்களுக்கு நிலைமை புரிந்து விட்டது. எல்லோரும் கதவை இழுத்து மூட முயற்சித்தனர். உனது கை நடுவில் அகப்பட்டு விட்டது. நீ கத்தினாய். எப்படித்தான் அசுரபலம் வந்ததோ? உள்ளே சென்று விட்டோம். நாம் போனவேகத்தில் பொலிசாருடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்த காவலனை தடுக்கப் பாய்ந்தாய் நீ. அவன் உயரமானவன்` நீயோ குள்ளம். அங்கிருந்த கதிரையின் மேலேறி அவனது தலையில் சுழல் துப்பாக்கியினால் நீ அடித்தாய். அவன் சுருண்டு விழுந்தான். இதற்குள் ஒரு காவலன் நிர்மலாவின் அறைத்திறப்பை எடுத்துக்கொண்டு ஓடி மறைந்து விட்டான். நாங்கள் கதவை உடைத்தோம். உடைத்ததின் பின்னர்தான் கதவின் கனம் குறித்து ஆச்சரியப்பட்டோம். அந்தப்பணி வெற்றிகரமாக நிறைவேற நீயும் சந்திரனண்ணாவும்தான் காரணம். சந்திரனண்ணா வெளித்தொடர்புகளைக் கவனித்துக் கொண்டார். ஏற்கனவே நீ அந்தச் சிறையில் இருந்தவன் என்ற வகையில் உனக்கு அந்தச் சிறைச்சாலை அமைப்பு, நடைமுறைகள் பற்றித் தெரிந்திருந்தது. அதனால் எமது வேலை சுலபமாகியது. பிரான்சிஸ்! உன்னை நினைக்கும்போது, தண்டவாளப்பாதையால் நாம் நடந்து கொண்டு வரும்போது நீ சொன்ன பகிடிதான் முதலில் நினைவுக்கு வரும். மட்டக்களப்பிலிருந்து நிர்மலாவை புகையிரதம், பேருந்து வழியாக மன்னாரை நோக்கிக் கூட்டிக் கொண்டு வந்தோம். மதவாச்சி வீதியில் நாங்கள் சென்ற பேருந்தை விலத்திக் கொண்டு சிறிலங்கா இராணுவத்தினர் சென்றனர். அவர்கள் நேரியகுளம் சந்தியில் திடீர்ச் சோதனை செய்வது வழக்கம். ஆகையால் நாம் அதற்கு முன்னரே இறங்கிவிட்டோம். அங்கிருந்து மடு ரோட்டுவரை தண்டவாளப் பாதையால் ஒரே நடைதான்.

நீண்டநேர நடை! அனைவருக்கும் தாகம். அந்த நடு இரவில் தண்ணீர் எங்கே கிடைக்கும் என்பது தெரியவில்லை. ஒருவருடைய வேதனையை மற்றவருக்குக் காட்டாமல் நடந்து கொண்டிருந்தோம். அப்போது நீ சொன்னாய். காக்கா! தமிழீழம் கிடைச்ச உடன் தண்டவாளக் கரையெல்லாம் நாங்கள் கிணறு தோண்டி வைப்பம். ஏனெண்டா அப்ப முஸ்லீம்கள் தங்களுக்கு ஒருநாடு வேணும் எண்டு எங்களோட சண்டை பிடிப்பானுகள். அந்தநேரம் எருக்கலம் பிட்டி முஸ்லீம், காத்தான்குடிக்கு போகவேண்டியிருக்கும். அப்ப அவன் தண்ணிவிடாயால அவதிப்படக் கூடாதல்லே. என்றாய். இதைக்கேட்டு நானும் நிர்மலாவும் கூடவந்த சகோதரியும் சிரித்தோம். இடையில் ஒரு பாழுங்கிணறு தென்பட்டது. நீ ஒரு மெழுகுப் பையில் நிர்மலா அக்காவின் ஒரு சேலையைக் கட்டி தண்ணீர் அள்ளித் தந்தாய். மெழுகுப் பை தண்ணீர் கோலுவதற்கு வசதியாக ஒரு கல்லைக் கட்டித் தொங்கவிட்டிருந்தாய். அந்த நேரம் அந்தத் தண்ணீர் தேவாமிர்தமாக இருந்தது. அடுத்தநாள் அனைவருக்குமே வயிற்றோட்டம். அது குடித்தது பாழுங்கிணற்றுத் தண்ணீர் தான் என்பதை உறுதிப்படுத்தியது.

அன்று முஸ்லீம்கள் பற்றி வேடிக்கையாகச் சொன்னாய். ஆனால் வரலாறு மிக மோசமான படிப்பினைகளை எமக்குத் தந்துள்ளது. அதை நான் மட்டக்களப்பு மண்ணுக்கு மீண்டும் சென்றபோதுதான் தெரிந்து கொண்டேன். முஸ்லீம்கள் பற்றி இப்படி வேடிக்கையாகச் சொன்னாலும் முஸ்லீம்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது பலமுறை சிந்தித்து எடுக்க வேண்டும் என்றாய். அப்படித்தான் நடந்து கொண்டோம். ஆனால் எமது பெருந்தன்மைகள் பலவீனங்களாக உணரப்பட்டுவிட்டன. என்னையும் உன்னையும் எனது நண்பர்களையும் உபசரித்த குடும்பத்தவர்களை அகதிமுகாமில் காணும் அவலத்தை ஏற்படுத்திவிட்டது. இரண்டு எஸ்.எம்.ஜிக்கள், நாலு றிப்பீட்டர்கள், இரு சுழல் துப்பாக்கிகள், ஒரு வேட்டைத் துப்பாக்கி இவைதான் நாம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தைத் தாக்கச் செல்லும்போது கொண்டு சென்ற ஆயுதங்கள். அதிலும் ஒரு றிப்பீட்டர் இயங்கவில்லை. தாக்குதலுக்கு முன் எந்தப் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்துவது என்று திட்டமிடும்போது நீ கழுவாஞ்சிக்குடி மீது தாக்குதல் நடத்துவோம் என்றாய். புளொட் இயக்கத்தைச் சேர்ந்த பார்த்தனின் மறைவுக்குக் காரணமாக



படிப்பகம்

இருந்தவர்கள் அவர்கள். ஆகவே அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் திமிரை அடக்க வேண்டும் என்றாய். நாம் தாக்குதல் நடத்தினோம். மட்டக்களப்பின் செல்வமான பரமதேவாவையும், ரவியையும் இழந்து ஒரே ஒரு ரைபிளை மட்டுமே கைப்பற்றினோம். அத்தாக்குதலில் சயனட் உட்கொண்ட நிலையில் "அம்மாட்ட சொல்லுங்கோ உங்கட மகன் சண்டையிலதான் செத்தானெண்டு" என்று பரமதேவா சொன்னது உன்னையும் என்னையும் ஏன் அந்தத்தாக்குதலில் பங்குபற்றிய அனைவரையுமே பாதித்திருந்தது. அதற்குப் பின் வரலாறு வேகமாக ஓடியது. ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைத் தாக்கி வெற்றி கண்டோம். இதன் பின் நீயும் நானும் இணைந்து தாக்குதல்களில் ஈடுபட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான் யாழ்ப்பாணம் வந்துவிட்டேன். நீ மட்டக்களப்பில் செய்யும் சாதனைகளைப் பற்றி எல்லோரும் சொன்னார்கள். தம்பட்டையில் நடுவீதியில் நின்று எம்.16 உடன் தாக்குதல் நடத்தினாயாம். இப்படியெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் உனது சாதனைகளைப்பற்றி எல்லோரும் எனக்கு வந்து சொல்லுவார்கள். மட்டக்களப்பு நகரத்தினுள் உனக்காக நடந்த முற்றுகைதான் எத்தனை?

இந்திய இராணுவம் வந்த பின்னர் உனது பெயர் மட்டக்களப்புக்கு வெளியிலும் பிரபல்யமாகியது. அன்னையர் முன்னணியை ஸ்தாபித்ததும் உண்ணாவிரத நிகழ்ச்சியும் மக்கள் கூட்டம் புலிகளின் பின்னால் இருக்கிறது என்பதை உலகிற்கு புலப்படுத்தியது. என்ன செய்வது என்று திண்டாடும் நிலையை இந்தியப்படையினருக்கு ஏற்படுத்தினாய். உண்ணாவிரதத்தை குழப்பமுயன்று தோற்றுப்போனது இந்தியப்படை. பாரதப்போர் 18 நாட்கள்: பாரதம் தொடுத்த போர் எத்தனை நாட்கள்? என்ற கேள்வியை மட்டக்களப்பு நகர் முழுக்க ஒட்டினாய். மட்டக்களப்புக்குள் புலிகள் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை அடிக்கடி உணர்த்திக் கொண்டிருந்த போராளி நீதான் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். மேஜர் ஜெயராம், அவனை எனக்கும் தெரியும். இந்திய இராணுவத்திடம் நான் கைதியாக இருந்தபோது அவனது திமிர்ப் பேச்சுக்களைக் கேட்க நேர்ந்தது. உலகத்திலேயே தலைசிறந்த அறிவாளி தானே என்ற எண்ணம் அவனுக்கு. இந்திய இராணுவம் உன்னைத்தேடிச் சல்லடைபோட்டு முகாம் திரும்பியவுடன் அவர்களுடன் நீ தொலைபேசியில் பேசுவாயாம். என்ன பிரான்சிஸ்! உங்கட ஆக்களெல்லாம் பக்கதிலதான் இருக்கிறாங்க. நாங்க எப்ப சந்திக்கிறது என்று கேட்டபோது அது கஷ்டம். நம்மட கழுத்தில சயனைட் இருக்குதே என்று பதிலளித்தாயாம். ஏன் உங்க வாழ்க்கையை பழுதாக்குறீங்க? என்று கேட்டதற்கு நானா? நீங்களா? என்று எதிர்க் கேள்வி போட்டாயாம்.

☐ மேஜர் ஜெயராமுக்குச் சொன்னதை நீ செய்து காட்டினாய். உனது சொந்த ஊரவனே உன்னைக் காட்டிக் கொடுத்தான். உன்னைச் சுற்றி வளைத்த இந்தியப்படையினரிடமிருந்து நீ தப்ப முடியவில்லை. ஏற்கனவே நடந்த முற்றுகையில் தப்பி ஓடும்போது ஒரு கண்ணாடி உனது காலை வெட்டியிருந்தது. அதன் காயம் உனது வேகத்தை மட்டுப்படுத்தியது. அப்போதும் கூட நீ அவர்களின் ஆயுதத்தைப் பறித்துக் கொண்டுதான் ஓடினாய். ஒரேஒரு வெடிதான் உனக்கு. அதுவும் காலில். நீ சயனைட்டை உட்கொண்டாய். நம்மட கழுத்தில் சயனைட் இருக்குதே என்ற உனது வரிகள் உலகமெங்கும் எதிரொலித்தன.

☐ B.B.C யின் அன்றைய தமிழ்ச் செய்தியிலும், செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்திலும் உன்னைப்பற்றிய குறிப்புக்களே கூடியளவு நேரத்தைப் பிடித்தன. உனது பணியின் முக்கியத்துவத்தை அன்றுதான் உலகம் அறிந்து கொண்டது. பிரான்சிஸின் மரணம் கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசியலில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று B.B.C குறிப்பிடுமளவிற்கு உனது வரலாறு அமைந்திருந்தது.

☐ பிரான்சிஸ்! இன்று வரலாறு மாறிவிட்டது. வவுனியாவில் எந்த புளொட்காரரை காட்டிக் கொடுத்ததற்காக தர்மே என்ற சிங்களவனைச் சுட்டோமோ அதே வவுனியாவில் அதே புளொட் இயக்கம் இன்று முழு தமிழ் இனத்தையுமே காட்டிக் கொடுக்கின்றது. பல தர்மேக்கள், சிறிசேனாக்களின் எடுபிடிகளாகி

www.padippakam.com

விட்டனர் அவர்கள். பார்த்தனைச் சுட்டதற்காக களுவாஞ்சிக்குடி காவல் நிலையம் மீது தாக்குதல் நடத்துவோம் என்றாய். அன்று நாம் களுவாஞ்சிக்குடியை கைப்பற்றாவிட்டாலும் இளைய தலைமுறையினர் கைப்பற்றிக் காட்டிவிட்டனர். இன்று அதே களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா பொலிசாருடன் இணைந்த புளொட் சிறிலங்காவின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் போகின்றதாம். ஆனாலும் நாம் அன்று செய்தது சரியேதான். இனியும் செய்யப்போவது சரியைத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# கப்டன் சாளி



அண்ணை இதை வைச்சிருங்கோ. நான் சென்றிக்குப் போறன். ஜெயிலுக்கு உள்ளேயும், வெளியில் வந்தாப் பிறகும் நான் எழுதியதெல்லாம் இதில் கிடக்கு. இனி இது உங்கட பொறுப்பு. ஏனென்டா நான் இனி திரும்பி வருவேனோ தெரியாது. இவ்வாறு கூறி ஒரு பைலை ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்கிறான் சாளி. இரண்டு தினங்கள், சாளி எதிர்பாராத விபத்தொன்றில் எம்மைவிட்டுப் பிரிந்து சென்று விடுகிறான் என்ற சேதிகிடைத்தது.

சாளியின் அந்தப் பைலைத் திறக்கிறோம். இறுதியாக சாளியினால் தரப்பட்ட படத்தையும் கவிதையையும் காண்கிறோம். பட்டமரம் ஒன்றில் சென்றியில் இருக்கும் ஒரு போராளியின் உணர்வுகளைச் சித்தரிக்கும் கவிதையொன்றைப் படிக்கிறோம். பேச்சுவார்த்தையில் எந்தப் பலனுமில்லை. ஆயுதப்போராட்டமே ஒரே தீர்வு என்பதை அது வலியுறுத்துகிறது. சாவு தன்னை நெருங்குகின்றது என்பதை தனது உள்ளுணர்வுகளினால் உணர்ந்து கொண்ட போராளி இவன். இலட்சியத்தை நேசிக்கும் இந்தப்போராளியின் சத்தியமான வார்த்தைகளை மீண்டும் படிக்கிறோம். இதயம் கனக்கிறது.

ஒரு சிறந்த ஓவியனாக, கவிஞனாக, எழுத்தாளனாக, புகைப்படக் கலைஞனாக இவை எல்லாவற்றுக்கும் மேலாக உன்னதமான போராளியாக வாழ்ந்த சாளிக்கு வயதோ இருபத்தைந்து கூட ஆகவில்லை. இந்த வயதிற்குள் சகலகலாவல்லவனாக திகழ்ந்த சாளியின் ஆற்றலைக் கண்டு நாம் அனைவருமே வியந்ததுண்டு. பண்டிதர் சரணாலயத்தின் சுவர்களில் வரையப்பட்டிருந்த சகல ஓவியங்களும் சாளியின் கைவண்ணமே. ஈழமுரசு பத்திரிகைதான் இவனது ஆற்றல்களை இனங்கண்டு, இவன் திறமைகளை வெளிப்படுத்தியது. முதன்முதலாக தன்னோடு கூட இருந்து போராடி களத்தில் மடிந்த ஒரு போராளியைப் பற்றியதான கதை ஒன்றை உணர்வுபூர்வமாகச் சித்தரித்திருந்தான் சாளி. அதைத் தொடர்ந்து வேறு சில படைப்புகளும் வெளியாகின. தளபதி கிட்டுவுடன் எப்போதும் காணப்படும் இவன், சதிகாரர்களினால் ஒரு காலை கிட்டு இழந்து வைத்திய சிகிச்சைக்காக இந்தியா செல்லும்போது அவருடனே பயணமானான். அரசியற் சூழ்நிலையின் மாற்றங்களினால் இந்தியப் படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதின. தமிழகத்தில் இருக்கும் புலிகளுக்கோ வீட்டுக்காவல். இந்நிலையிலும் தமிழீழம் என்ற சஞ்சிகை தமிழகத்தில்



படிப்பகம்

www.padippakam.com

வெளிவந்து கொண்டிருந்தது. அந்தச் சஞ்சிகையில் வெளிவந்த சித்திரங்களும் சாளியினுடையதே. தனது எண்ணப்படி புலிகளை ஆட்டுவிக்க முடியாது என்பதை இந்திய அரசு சந்தேகமறத் தெரிந்து கொண்டபின், தமிழகத்தில் இருந்த புலிகளை சிறையில் தள்ளியது. பின்னர் எமது சொந்த மண்ணுக்கு நாடு கடத்தியது. இதற்கிடையில்தான் எத்தனை வாக்குறுதிகள்? எத்தனை நம்பிக்கைத் துரோகங்கள்? சென்னைச் சிறைச்சாலை, பருத்தித்துறை முகாம், காங்கேசன்துறை முகாம் என்று சாளி யின் சிறைவாழ்வும் தொடர்ந்தது. என்ன நோக்கத்திற்காக இவர்களை சிறையில் அடைத்ததோ அந்த நோக்கிலும் இந்திய அரசு தோல்வி அடைந்தது. சிறைச்சாலையை கல்விச்சாலையாக்கினார் புலிகள்.

இந்திய அரசின் நடவடிக்கைகளினால் மனம் நொந்திருந்த போராளி சாளி S.L.R ஒன்றை ஊன்றியபடி காணப்படும் மகாத்மா காந்தியின் ஓவியம் ஒன்றை வரைந்திருந்தான். தப்பித் தவறி இந்தியப்படையில் சேர்ந்துவிட்ட கொஞ்சம் மனச்சாட்சியுடைய கேணல் சுக்கிந்தர்சிங் இந்த ஓவியத்தைப் பார்த்தார். அவரை உறுத்தியது இவனது ஓவியம். கைகொடுத்துப் பாராட்டிவிட்டுச் சென்றார். தனது போராட்ட அனுபவங்களை எழுத்துருவமாக்கினான் சாளி. எங்களுக்கு விடுதலை கிடைக்குமா? இவை வெளியில் செல்லுமா? என்றெல்லாம் நினைத்து அவன் முடங்கிக் கிடக்கவில்லை. தனது கடமையைத் தொடர்ந்தான். மானிப்பாயில் சோப் தொழிற்சாலையொன்றில் நடந்த இராணுவ முற்றுகையை எதிர்த்துப் போராடி தனது முதல்கள அனுபவத்தை புத்தக வடிவமாக வரைந்தான். எந்தப் போராளிக்கும் தனது முதல் கள அனுபவங்கள் மறக்க முடியாதவையாக இருக்கும். எனவே தனது உள்ளுணர்வுகளையெல்லாம் அதில் கொட்டியிருந்தான் சாளி. அதுமட்டுமல்ல சுமார் பத்துப்பேரை தனது மாணவர்களாக்கி அவர்களை சிறந்த ஓவியர்களாக இந்த மண்ணுக்குக் கொடுத்தான் சாளி. தியாகி திலீபனில் மதிப்பும், அன்பும் கொண்டவன் இவன். எனவே திலீபனின் இரண்டாவது நினைவு தினத்தன்று கையெழுத்துப் பிரதியாக சிறந்த ஓவியங்களையும், கவிதைகளையும் கொண்ட மலர்ஒன்றை உருவாக்கி வெளியிட்டான். தியாக திலீபம் என்று அதற்குப் பெயரிட்டிருந்தான். மிகக் குறைந்த வசதிகள் உள்ள சிறைச்சாலையினுள் இப்படியெல்லாம் செய்ய முடியும் என்று செய்துகாட்டினான். அதுமட்டுமல்ல திலீபனின் நினைவாக ஓவியப் போட்டி ஒன்றை நடத்தினான். சிறந்த கருத்தும், அழகும் உள்ள ஓவியங்களுக்குப் பரிசும் வழங்க ஏற்பாடு செய்தான்.

இவனது திறமைகளை அறிந்த மேஜர் ஜெயராம் இவனையழைத்து தன்னை ஒரு ஆட்டுமந்தைக் கூட்டம் பின்தொடர்வதாக பிரபாகரன் நினைப்பதை ஓவியமாக வரையச் சொன்னார். படம் வரையாவிட்டால் விடுதலை இல்லையென்று மிரட்டினார். வாழ்வை அனுபவிக்க வேண்டிய இளமைப் பருவம் என்பது சாளிக்கு நினைவில் வரவில்லை. போராளிகள் செய்த தியாகம்தான் நினைவுக்கு வந்தது. எந்த விளைவுக்கும் தயார் என்பதைத் தெரிவித்துவிட்டு உன்னதமான போராளியாக தனது சிறைக்குத் திரும்பினான். இதையெல்லாம் எழுத்து வடிவத்தில் கொண்டு வந்திருந்தான். அடிபணியா எரிமலைகள் என்ற பெயரில் அவை வெளியாகியிருந்தன.


போராட்டக்களத்தில் இவனது பங்கு மறக்கக் கூடியதல்ல. மானிப்பாய் சோப் தொழிற்சாலை முற்றுகையிலிருந்து அதன்பின் இராணுவத்தினருடன் நடந்த ஏராளமான மோதல்களில் இவன் தனது திறமையை வெளிப்படுத்தினான். தளபதி கிட்டு கலந்து கொண்ட தாக்குதல்களில் எல்லாம் பெரும்பாலும் கூடவே இவனும் கலந்து கொண்டுள்ளான். பண்ணை பொலிஸ் நிலைய விடுதி மீதான தாக்குதல் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது.

சிறிலங்காப் படைகளுடனான தற்போதைய இந்த மோதலில் காங்கேசன்துறைப் பகுதியிலே இவன் தனது கடமையை ஏற்றிருந்தான். கடந்த 13.07.90 அன்று இரவு வீதி விபத்து என்ற வடிவில் விதி இவனை நெருங்கியது. இவனது பேனா போர்க்கால இலக்கியங்களைப் பிரசவித்தது. இவனது தூரிகை இந்த மண்ணின் நிலைக் கண்ணாடி ஆகியது. இவனது துப்பாக்கி ஒளி துட்டர்களுக்கு நாராசமாகியது. இவன் மறைந்த பின்னும் அது கனன்றுகொண்டே இருக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



ஆனையிறவுச் சமர்.

மக்களின் மனங்களில் நீங்காத நாட்கள்.

தினமும் நெஞ்சில் ஏக்கமும், விழிகளில் கண்ணீரும் சுமந்த நாட்கள். சமர்க்களம் அது.

வானத்தில் அலுமினியக் கழுகுகள் ஓயாத வலம். தரையில் அவை வீசிய குண்டுகளின் சிதறல்கள்... சேதங்கள்... உயிரிழப்புக்கள்...

இதன் மத்தியில் கூட தரையில் அந்த உப்பு வெளியில் நேரடிமோதல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. யாருமே தலை நிமிர்த்த முடியாத ஒரு நிலை. பலர் காயம் சிலர் வீரமரணம்.

ஐயோ நான் காயப்பட்டுட்டன்

என்ர ரைபிளை எடுங்கோ...

ஓடுங்கோடி... பொயின்ரைப் பிடியுங்கோ... என்னைத் தூக்காதேங்கோ... என்ற கதம்ப ஒலிகள் கேட்டுக் கொண்டேயிருந்தன.

காயமடைந்த, வீரமரணமடைந்த போராளிகளைத் தூக்கிப் பின்னே அனுப்புவதில் நான் மிகப்பெரிய சிரமத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தேன். நீண்ட தூரம் என்பதாலும், இடம் மாற்றப்படுவதாலும் ஒருமுறை தூக்கிச் செல்வோர் மீண்டும் வர நீண்டநேரம் பிடித்தது.

இதிலிருந்து நான் ஓரளவு விடுபட்டது தேவானந்தியாலும் இன்னும் சிலராலும்தான். தேவானந்தி மிக மிகச் சுறுசுறுப்பாக இவ்வேலையில் ஈடுபட்டதுடன் தன் குழுவிலுள்ளோரையும் உற்சாகப்படுத்தி இவ்வேலையில் சுறுசுறுப்பாக ஈடுபடவைத்தாள்.

நம்பமுடியாத ஒரு வரைவை, துணிவை அந்த நேரம் அவளிடம் நான் கண்டுகொண்டேன்.



# லெப்டினன் தேவானந்தி



படிப்பகம்

அப்போதுதான் அவளை நான் இனம் கண்டுகொண்டேன்.

கடல் அலைபோன்ற சுறுசுறுப்பு. நாலாதிசையும் சுழன்று துறுதுறுக்கும் கண்கள். வளவளத்த பேச்சு. பிறருக்கு வலிந்து உதவி செய்யும் மனப்பான்மை. இவ்வளவும் கொண்டவள்தான் தேவானந்தி.

பள்ளி மாணவியாக இருக்கும்போதே இவள் சுறுசுறுப்பு நிறைந்தவளாகத்தான் இருந்தாள். பிறருக்கு உதவி செய்வதில் இவள் என்றுமே பின்நின்றதில்லை. இதனால்தானோ என்னவோ மாணவ மாணவிகளிலிருந்து ஆசிரியர்கள் வரை தேவராணி... தேவராணி... என இவளின் இயற்பெயரையே அழைத்தவண்ணம் இருப்பார்கள்.

பாடசாலையில் மாணவிகள் தலைவியாக சிறிதுகாலம் விளங்கிய இவள், விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினாள். இவள் இருக்கும்போது கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம் விளையாட்டுத்துறையில் மற்றைய பாடசாலைகளுடன் போட்டியிட்டு பல பரிசில்களைத் தட்டிக் கொண்டது. மேலும், நாடகத்துறையிலும் இவளுக்குப் பாரிய திறமை காணப்பட்டது.

1987ம் ஆண்டு, தந்தை பாலசுப்பிரமணியம் இறந்தபின் குடும்பப் பொறுப்புடன் இவள் விளங்கினாள்.

1990ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தபோதே விடுதலைப் போராட்டத்துடன் தன்னை இணைத்துக்கொள்ள இவள் துடித்தாள். அந்தத் துடிப்பினால் ஆரம்ப சுகாதார நிலையத்தில பணியாற்றியதுடன், போராட்டம் சம்பந்தமான புத்தகங்களை மக்களுக்கு வீடுவீடாக எடுத்துச் சென்று விற்றாள். இறுதியில் முழுமையாகத் தன்னை போராட்டத்துடன் இணைத்துக் கொண்டாள்.

தனது ஆரம்பப் பயிற்சியின் போது, பயிற்சிப் பாசறையில் எதற்குமே இவள் பின்நின்றதில்லை. சிறிது வாயாடி என்பதால் அதற்கான தண்டனைகளை இவள் பெற்றுக்கொண்டாலும், திறமையாகப் பயிற்சியினை முடித்துக்கொண்டு வெளியேறினாள்.

மேலதிகப் பயிற்சிகளின் பின், ஆனையிறவுச் சண்டைதான் இவளின் முதல்களமாக அமைந்தது. இதில் இவள் விநியோகக் குழுவில் பங்காற்றினாள். குழுவில் ஒருத்தியாக ஆரம்பித்த களம்... குழுத்தலைவியாக மாறவைத்தது. சுறுசுறுப்பாலும் அசாத்திய துணிவாலும் பல உயிர்களை மரணத்தினின்றும் இவள் காத்தாள்.

மணலாற்றில் இடம்பெற்ற மின்னல் தாக்குதலில் பதினைந்து பேர்கொண்ட ஒரு குழுவின் தலைவியாக நின்று போரிட்டாள். தலையில் சிறிதாகக் காயப்பட்டவள், இரத்தம் கசிவதையும் பொருட்படுத்தாது, தன்னருகிலே காயமடைந்து விழுந்த மற்றைய போராளியின் காயத்துக்குக் கட்டுப்போட்டுக் கொண்டிருந்தாள். சண்டையின்போது பதற்றமடையாமல் பகிடியாகக் கதைத்தபடி அடிபடும் பழக்கம் இவளிடம் இயல்பாகவே இருந்தது. அப்போதுதான் இவளது திறமை என்னால் உணரப்பட்டது.

நாடகத்தில் நடிப்பதிலும் நாடக வசனம் பேசுவதிலும் வல்லவளான இவள், பாசறையில் நிகழ்ச்சி போடுவதில் முன்நிற்பாள். அழகான முகபாவத்துடன் நடிப்பாள். சிரிக்க வைப்பாள்.

பின்னர், சிறிது காலம் கடற்கரைக் காவலரண் ஒன்றில் பிறெண் லோடர் ஆக நின்றாள். அதற்காக விசேட பயிற்சியினையும் எடுத்துக் கொண்டாள். தனது வாயாடிப் பழக்கத்தால் பொறுப்பாளரிடம் அடிக்கடி தண்டனை வாங்கினாலும், சிறிது நேரத்தில் எல்லாவற்றையும் மறந்து ஓடி ஓடி வேலை செய்வாள்.

www.padippakam.com

விளான்பகுதி அது. தமிழர்கள் காலாகாலமாகப் பிறந்து, வளர்ந்து, உழுது பிழைத்த வளம்மிக்க மண் அது. நெற்றி வியர்வை சிந்தி உழைத்த பணத்தில் எழுந்து நிற்கின்ற வீடுகள்... நித்திரையின்றிப் பாடுபட்டதால் பச்சைப் பசேலென எழுந்து நின்று காற்றுக்குக் கையசைக்கும் காய்கறித் தோட்டங்கள். எல்லாமே கவனிப்பாரற்று, காடு மண்டி, தூசி படிந்து தமிழர்களின் அவல நிலையைப் பறைசாற்றியபடி...

அங்கு வாழவேண்டிய வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் அகதிகளாய் எங்கோ ஒரு பாடசாலையில் அவல வாழ்வு வாழ்ந்தபடி...

அங்கேதான் மகளிர் படையணி பற்றைகளை விலக்கி, கவனமாகக் காலடி பதித்து முன்னேறிக் கொண்டிருந்தது. எங்கே பதுங்கி இருக்கிறார்கள், எப்போது தாக்குவார்கள் என்றே தெரியாத நிலை.

கோயிலடி வந்திட்டுது, நில்லுங்கோ!... குழுப்பொறுப்பாளர் கூறுகிறார்.

அங்கேதான் அந்தக் குழு தங்கியிருந்து காவல் புரிய ஆரம்பிக்கிறது. தேவானந்தியும் இன்னொரு போராளியும் தமது இலகு இயந்திரத் துப்பாக்கியுடனும் ஏனைய பொருட்களுடனும் ஏற்ற நிலை தேடி, முன்னே சென்று நிலையெடுக்கின்றனர். மேலும் பல குழுக்கள் பரவலாக முன்னேறி நிலையெடுத்துக் கொள்கின்றன. அப்போது அங்கே வந்த பொறுப்பாளர் பல ஏற்பாடுகள் பற்றியும் கதைத்துவிட்டு,

ஏதாவது ஒரு பகுதியால் எதிரி முன்னேறுவான். குழுக்களைத் தயார்நிலையில் வைத்திருங்கள், என்று கூறிவிட்டுச் செல்கிறார்.

குழுக்களுக்கோ முற்றிலும் புதிய இடம். எந்த வழியால் போனால் எந்த வழியால் வரலாம் என்றே தெரியாத நிலை. மாலை மங்கி, இருள் கவிந்துகொண்டிருந்த நேரம் என்பதால் இருக்கும் இடத்தைக் கூடப் பழக்கப்படுத்திக் கொள்ள முடியாத நிலை. ஆனால், மனதில் மட்டும் எதிரியை ஒரு அங்குலம்கூட முன்னேற விடக்கூடாது, விடமாட்டேன் என்ற உறுதி மலை போல.

18.09.1992 காலை ஐந்து மணி. பொழுது மெல்லப் புலர்கிறது. குழுக்கள் யாவும் மூன்று மணியிலிருந்தே எதிர்பார்ப்புடன் தத்தமது நிலைகளில். தேவானந்தியும் பிறெண் கண்ணரும் ஒரே இடத்தில் தயார் நிலையில் தேவானந்தி ஆவலோடு விழிகளை உருட்டி முன்னே பார்க்கிறாள்.

எங்கட பக்கத்தாலை வரவேணும் இவன், நல்லாக் குடுக்கலாம். அவளின் மனம் வெளிப்படுகிறது. சிறிது நேரத்தில் அவளின் எண்ணம் நிறைவேறுகின்றது. இவள் இருக்கும் பகுதி நோக்கித்தான் இராணுவத்தினர் வேட்டுக்களைத் தீர்த்தபடி முன்னேறுகின்றனர். முதலில் பிறெண்தான் சடசடக்க ஆரம்பிக்கிறது. தொடர்ந்து எங்கும் பரவலாக சடசடப்பு... குண்டு வெடிப்பு... இடையிடை பிறெண்கண்ணை வாங்கி வேட்டுக்களைத் தீர்க்கிறாள் தேவானந்தி.

உற்சாகமாகப் போரிட்டுக்கொண்டிருந்த தேவானந்தி திடீரென... ஐயோ... அம்மா...! என்றபடி தனது கால்களைப் பற்றிக்கொள்கிறாள். எதிரியின் ரவையொன்று அவளது கால்களைத் துளைத்துவிட்டது. தனது ஜீன்ஸ் பொக்கற்றினுள் இருந்து துணியொன்றை எடுத்து காயத்தின் மேலே தானே கட்டிக்கொள்கிறாள். மீண்டும் தனது வேலையில் ஈடுபட முனைகிறாள். முடியவில்லை. எத்தனையோ போராளிகளின் இரத்தப்பெருக்கைக் கட்டுப்படுத்தி, தூக்கிச்சென்று உயிர்காத்தவளை தூக்கிச் செல்வதற்கு அருகில் யாருமே இல்லை.

தேவானந்தியைப் பின்னுக்கு போகுமாறு கூறினேன். மெல்ல இழுத்து இழுத்து, பின்னே வர முயற்சிக்கிறாள். தலைச்சுற்றல் ஒருபடி மேலேறுகிறது... அத்தோடு தெரியாத இடம்... எல்லாம்



படிப்பகம்

இணைந்து அவளை எங்கோ கொண்டு சென்றுவிடுகிறது... சோர்வு காரணமாக அவள் மயங்கிவிட்டாள்.

நேரடி மோதல் ஓய்கிறது. இராணுவம் இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றுவிட்டது. மாலை ஐந்து மணியிருக்கும். குழுக்கள் சரிபார்க்கப்படுகின்றன. தேவானந்தி காயப்பட்டிருந்தால் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டிருப்பாள் என்று நான் எண்ணிக்கொண்டு காயம் அடைந்த போராளிகளின் பெயர்ப்பட்டியலைப் பார்த்தேன். அதில் தேவானந்தியின் பெயர் இல்லை.

எங்கே தேவானந்தி...? யாருக்கும் தெரியவில்லை.... தேடுகிறார்கள்.... இருள் சூழ்ந்து கொண்டிருக்கிறது. எல்லோருமே தேவானந்தியைத் தேடுகிறோம். இடம்தெரியாமல் வழிமாறி முன்னே சென்று விட்டாளோ என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. உடனே இரு குழுக்களாகப் பிரிந்து இருவேறு பக்கங்களால் தயார் நிலையில் முன்னே செல்கிறோம். தேடுகிறோம்.

ஓர் இடத்தில் சிறிது முன்னால் ஒரு உடல் வீழ்ந்து கிடப்பது தெரிவதாக எனது மற்றைய குழு அறிவித்தது. அது எதிரியின் துப்பாக்கி சுடும் தூரம் என்பதால் மிகுதிப்பேரை நிலையெடுக்குமாறு கூறிவிட்டு இருவர் மட்டும் நெருங்கிச் சென்றார்கள்.

அங்கு குப்புற வீழ்ந்து கிடப்பது தேவானந்திதான். எதிரியின் சூழ்ச்சிகள் ஏதாவது இருக்கலாம் என்பதால் அருகே சென்று நிலையெடுத்து அவளது கால்களை பிடித்து இழுத்தார்கள். "டமார்" குண்டொன்று வெடிக்கிறது. ஒரு நிமிடம் புரியாமல் திகைத்தவர்கள் தெளிவாகப் பார்த்தபோது நெஞ்சு சிதறி தேவானந்தி படுத்திருக்கிறாள். தான் இடம்மாறி வந்துவிட்டேன் என்பதை உணர்ந்த அவள், மேலும் நகரச் சக்தி இல்லாததால், எதிரியின் கையில் பிடிபடக்கூடாது என்ற விடுதலைப் புலிகளின் கொள்கை மரபிற்கு இணங்க சயனைட்டை உட்கொள்ள முன்னர் தன் உயிரற்ற உடல்கூட எதிரியை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தன் உடலை அசைத்தால் வெடிக்கக்கூடியதாகக் குண்டினைத் தன்னுடன் அணைத்தபடி படுத்து, சயனைட்டை உட்கொண்டிருக்கிறாள்.

அவர்கள் தேவானந்தியைத் தூக்கி வந்தார்கள்.

கலங்கிய எனது கண்களை மெல்லத் துடைத்துவிட்டு அவளருகே மண்டியிட்டு உட்கார்ந்து, இறப்பின் பின்னரும் எதிரியை ஓட விரட்ட, அழிக்க விரும்பிய அந்த வீர உள்ளத்தைத் தேடுகிறேன்.


தவித்துத் துடித்துக் கொண்டிருந்த அந்த உள்ளம் என்னை நோக்கி கை நீட்டுகிறது. உடனே தாங்கி அதை நான் எடுத்துக்கொள்கிறேன்.

உனது பாதையை நான் நிச்சயம் பின் தொடர்வேன் என முணுமுணுத்துவிட்டு, என் பின்னே திரும்பிப் பார்க்கிறேன். அதே பாதையில் காலடிபதிக்க வந்துள்ள மகளிர் படையணி வரிசையின் முடிவே என் கண்களுக்குத் தெரியவில்லை.

www.padippakam.com

# வீரவேங்கை நிதி





மன்னார் மாவட்டத்தில் வீரமரணம் அடைந்த முதல் புலி. இராணுவச் சுற்றிவளைப்பின்போது இறுதி வரை போராடி எதிரியின் கையில் தான் உயிரோடு பிடிபடக்கூடாது என நினைத்து தன்கைத் துப்பாக்கியாலே தன்னைத் தானே சுட்டு எமது இயக்க மரபுக்கு இணங்க வீர மரணத்தை அடைந்தவன் நிதி.

அன்று நாங்கள் நிதியைப் பற்றி அறிந்திருந்தோமே தவிர விடுதலையைப் பற்றிப் புரியவில்லை. நிதியின் இறுதி நிகழ்வு பெரிதாக ஊர்வலமாக நடத்தப்படவில்லை. அன்றைய காலகட்டம் மிகப் பயங்கரமாக இருந்ததால், ஒவ்வொருவர் வாயிலும் மெதுவாகப் பேசப்படுகிறது.

புலிப்படை நிதி இறந்து விட்டான் என்றே கூறப்படுகிறது. அன்றைய நேரத்தில் மரண நிகழ்வு என்பது எவராலும் தாங்கிக்கொள்ள முடியாத மனநிலையில்தான் இருந்தது.

இளம்வயது. வாழவேண்டிய காலம். இப்படி மரணித்துப் போவதா? என்று மக்கள் கலக்கத்தோடு கண்கலங்கித் திரிகின்றார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் நாம் தேவாலயத்துக்குப் போகும்போது ஒரு பையோடு சந்தியில் நிற்கும் நிதி.

அப்போது புலிப்படையைப் பார்க்க ஆவல். நாம் நேரத்திற்கு கோயிலுக்குப் போவதாகக் கூறிவிட்டு சந்தியில் நிற்கும் புலிப்படையினரைத் தள்ளி நின்றே பார்ப்போம். சிலர்



படிப்பகம்

www.padippakam.com

அவர்களோடு நெருங்கி நின்று கதைப்பார்கள். நாமும் மெதுவாகக் கிட்டச் சென்று நிற்போம்.

சில நாட்கள் போனபின் சந்தியில் சிரித்து நின்ற நிதியின் வீரமரணம்பற்றி போஸ்ரர் ஒட்டப்பட்டிருந்ததைப் பார்க்கும்போது எங்கள் மனம் எதையோவெல்லாம் யோசித்துக் கலங்கிக் கொண்டே இருந்தது.

ஏன் இறந்தான் நிதி? பிரபாகரனால் ஏன் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது? மரணம் என்பது என்ன? நாம் ஏன் வாழ்கின்றோம்? எப்படியான நிலையில் தமிழினம் இருக்கிறது? தமிழனுக்கு என்ன நடக்கிறது? எமக்கு யார் விடுதலை பெற்றுத்தந்தவர்கள்? விடுதலையில் நாம் வாழ்கின்றோமா? சிறீலங்கா அரசின் கொடுமைபற்றி புரியாத நிலையில் கிடந்த மக்களுக்கு நிதியின் வீரமரணத்தின் பின்தான் தமிழனின் நிலை எப்படியுள்ளது என்று தெரியவந்தது. எமக்கும் அன்று தெரியவந்தது.


ஒரு புலி வீரமரணம் அடையும்போது மேலும் பல புலிகள் பாசறையை நோக்கி வருவார்கள் என மேஜர் அசோக் அண்ணன் அன்று எங்களுக்கு அடிக்கடி கூறுவார். அது உண்மை. நிதி அண்ணனின் வீரமரணத்தின் பின் என் மண் எவ்வளவோ துரித வளர்ச்சி பெற்று வருகிறது. போராட்டத்தில் இன்று அத்தனைக்கும் காரணம் அண்ணன் காட்டிய வழியில் நின்று போராடி வீர மரணத்தைத் தழுவிய மாவீரர்கள். களத்தில் நின்று போராடும் போராளிகளே.

மன்னார் மண் முதல் முதல் கண்ட களப்பலியில் நிற்கும் நிதி, அன்சார் ஆகிய மாவீரர்களின் தியாகம் இன்று எம்மை பலப்படுத்தி வளரச் செய்துள்ளது. அன்சார் (நிக்கலஸ் மைக்கல் குருஸ்) எனும் போராளி தெல்லிப்பளையில் நடந்த முற்றுகையின்போது போராடி வீரச்சாவடைந்தான். நிதி, அன்சார், எம் மாவீரர்கள் எம் மண்ணுக்கு ஒளிவிளக்காக நின்று மெழுகுவர்த்தியாக உருகியவர்கள். எமது இயக்கத்தில் முதல் முதல் வீரமரணமடைந்த சங்கர் அண்ணன் அதே ஞாபகத்தில் எம் மன்னார் மண் இழந்த மாவீரர்கள் அன்சார், நிதி என்று கூறிக்கொண்டே போர்க்களம் நோக்கி எழுந்து வருகின்றோம். மாவீரர்கள் தமக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று போராடியவர்கள் அல்ல. தம் மண், இனம் விடுதலை பெறவேண்டும் என எண்ணி சாவுக்கு மத்தியில் நின்று போராடி எம்மையும் எம் மண்ணையும் பாதுகாத்து தங்கள் உடல்களை எமக்காகப் புதைத்தவர்கள். அவர்கள் காட்டிய வழியில் நாமும் விடுதலை பெறும் வரை தொடர வேண்டும். அவர்களின் இலட்சியமும் கனவும் நிறைவேறி எம் மண் விடுதலை பெற நாமும் எமக்காக களத்தில் விழுந்த மாவீரர்களின் ஆயுதத்தை எடுத்து களத்துக்குப் புறப்படுவோம். வா நண்பனே! இன்று புதைகுழியில் இருக்கும் மாவீரன் நிதியின் வரலாற்றைப் படிப்போம். நாளாந்தம் போராடிக் கொண்டிருக்கும் போராளிகளைப் பற்றிச் சிந்திப்போம். எங்களுக்காக எம் மண்ணைப் பாதுகாக்கும் புனிதப் போரில் நாளாந்தம் வீரமரணமடையும் மாவீரனின் பாதையில் சேர்வோம் என உறுதி எடுப்போம். விடுதலை பெற ஒவ்வொருவரும் போராட வேண்டும். போர்க்களம் வா தமிழா!
எங்கள் நிதி எமக்காக மடிந்தான். எங்கள் நிதி தன்னை விட மண்ணை அதிகம் நேசித்தவன். எங்கள் நிதி தன் குடும்பத்தை விட தமிழ் மக்களை நேசித்தவன். நிதியின் பாதையில் நானும் செல்வேன் என உறுதி எடுப்பேன். ஐயம் இல்லை எனக்கு.



படிப்பகம்

www.padippakam.com




# மேஜர் குமுதன்

காடுகளையும் காடுசார்ந்த இடத்தையும் கொண்ட முல்லை நிலம் என அழைக்கப்படும் வன்னி மண்ணிலும் வவுனியா நகரத்திலிருந்து வடகிழக்காக 15மைல் தூரத்தில் நீர் நிறைந்த குளங்களும், நீண்ட வயல் வெளிகளும், பச்சைப் பசேலென்று பயிரினங்களும் செழித்து வளரும் கிராமம்தான் சேமமடு ஆகும்.

இக்கிராமம்தான் மேஜர்.குமுதனின் பிறந்த ஊர். 1958ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் தேதி சரவணமுத்து சேதுப்பிள்ளை ஆகிய தம்பதியருக்கு மூத்த புதல்வனாக தளையசிங்கம் என்னும் இயற்பெயரைக் கொண்ட மேஜர் குமுதன் பிறந்தான்.

இவனுடைய குடும்பம் வறுமையான விவசாயக் குடும்பமாகும். ஆகவே தனது தந்தையுடன் சேர்ந்து குடும்பபாரத்தைச் சுமப்பதற்காக எட்டாம் வகுப்புடனேயே தனது பள்ளிப் படிப்பை நிறுத்திக் கொள்ளவேண்டிய கட்டாயம் தளையசிங்கத்துக்கு ஏற்பட்டது.

தனது குடும்பத்தை முன்னேற்றக் கடுமையாக உழைத்ததைப் போலவே தனது கிராமத்தினது முன்னேற்றத்திலும் அதிகளவு



படிப்பகம்

www.padippakam.com

அக்கறை காட்டினான். 1977ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த இன அழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து தமிழ் மக்களின் அவலமான வாழ்க்கையை அறிந்து துன்பப்பட்டான். வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புறத்திலுள்ள தமிழர்களின் நிலங்களும் சிங்களவர்களால் அபகரிக்கப்பட்டபோது கொதித்தெழுந்தான். இவ்விதம் திட்டமிட்ட ரீதியில் தமிழர்கள் நசுக்கப்பட்டபோது எமது இனம் பாதுகாக்கப்படுவதற்கான வழிவகைகளைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான்.

இக்காலப் பகுதியில்தான் ஆயுதப் போராட்டம் பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் கருத்துக்களும், செயற்பாடுகளும் சிறிது சிறிதாக மக்கள் மத்தியில் பரவின.
ஆயுத முனையில் தமிழ்பேசும் மக்களை அடக்கியாண்டு கொண்டிருக்கும் சிங்கள இனவாத அரசுகளை வெற்றி கொள்ள எமது இனமும் ஆயுதம் ஏந்தியெம்மைக் காத்துக்கொள்வதே சரியானதும், சிறந்ததுமான வழியென இளைஞன் தளையசிங்கம் உணர்ந்து கொண்டான்.

விளைவு, 1982ம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பகுதிநேர உறுப்பினனாக இணைந்து வவுனியா மாவட்ட மக்கள் மத்தியில் இரகசிய அரசியல் வேலைகளில் ஈடுபட்டான்.

விடுதலைப்புலிகள் அமைப்பு ஆரம்பத்தில் வவுனியா மாவட்டத்தில் காலூன்றி மக்கள் மத்தியில் வேலை செய்வதற்கு இவன் ஆற்றியபங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விதம் பகுதிநேர ஊழியனாக விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது 1983ம் ஆண்டு இவனது சொந்தக் கிராமமான சேமமடுவில் வைத்து இவனையும், இன்னும் சில இளைஞர்களையும் சிங்கள இராணுவத்தினர் கைது செய்து கடுமையாக அடித்துத் துன்புறுத்தினர். மூன்றாம் நாள் தளையசிங்கம் விடுவிக்கப்பட்டான்.
ஆனால், இவனுடன் கைது செய்யப்பட்ட மற்றவர்கள் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டனர். பின்னர் அங்கு நடந்த வெலிக்கடைப் படுகொலையில் சிங்கள வெறியர்களின் கோரப்பசிக்கு அவர்கள் இரையாகினர்.

1983ம் ஆண்டு நடந்த வெலிக்கடைப் படுகொலைகளும், அதேசமயம் இலங்கைத்தீவு முழுவதும் தமிழர் மீது நடந்த இன அழிப்பு நடவடிக்கைகளும், தளையசிங்கத்தின் மனதில் உறுதியான முடிவை எடுக்கத்தூண்டியது.

இதன் பின்னர் வன்னிப் பகுதியில் மக்கள் மத்தியிலான அரசியல் வேலைகளிலும், புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளும் வேலைகளிலும் ஈடுபட்டான். அத்துடன் மக்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களின் அன்பையும் பெற்றுக்கொண்டான். இது மட்டுமல்லாது கொக்கிளாய் இராணுவ முகாம் மீதான தாக்குதல், முல்லைத்தீவு செம்மலையில் சிங்கள இராணுவத்தின் மீதான தாக்குதல், புல்மோட்டையில் சிங்கள இராணுவத்துடன் நேரடி மோதல் போன்ற இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்று நாம் பெற்ற வெற்றிகளுக்கு மேஜர் குமுதனும் உறுதுணையாக இருந்தான்.

இவனுக்கிருந்த விசேட திறமைகளினாலும், கடமை உணர்வாலும் வவுனியா மாவட்ட நிதிப்பொறுப்பு குமுதனுக்கு வழங்கப்பட்டது. இயக்கம் தனக்கிட்ட பணியைச் செவ்வனே செய்ய வேண்டும் என்பதற்காக வெயில், மழை, காடு, மேடு என்று பாராது இரவு பகலாக இயக்கத்திற்கு உழைத்தான்.

காடுகள், வயல்கள், குளங்கள் என்று வவுனியா மாவட்டத்தில் குமுதனின் கால்கள் படாத இடமேயில்லை. வவுனியாக் காடுகளிலிருக்கும் ஒவ்வொரு மரமும் இவனால்தான் நாட்டப்பட்டிருப்பதைப் போலவும், அங்கே இருக்கின்ற ஒவ்வொரு தெருக்களும், ஒற்றையடிப்பாதைகளும் கூட இவனால்தான்



படிப்பகம்

www.padippakam.com

அமைக்கப்பட்டனவோ.... என்று சந்தேகிக்கும் அளவுக்கு வவுனியாவின் சந்துபொந்தெல்லாம் ஏறி இறங்கி இயக்க வேலை செய்தவன் குமுதன்.

இந்திய ஆக்கிரமிப்பாளனுடனான சண்டைகளின்போது பல சந்தர்ப்பங்களில் தமிழீழத்தின் காடுகளை ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராக வலிமை மிகுந்த அரண்களாகப் பாவித்துள்ளோம். இங்கெல்லாம் திசை கண்டுபிடிக்க முடியாத சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. இப்படியான வேளைகளில் திசை அறிகருவியின் துணையுடன்தான் பிரயாணம் செய்ய முடியும். ஆனால் குமுதன்தான் எமது தோழர்களுக்கு திசையறிகருவியைப்போல செயற்பட்டிருக்கிறான். ஏனென்றால் எந்த அடர்ந்த காடும் குமுதனுக்கு மனப்பாடம். இவ்விதம் அனுபவத்தின் மூலம் வவுனியா மாவட்டத்தின் வரைபடத்தையே மனப்பாடம் செய்து வைத்திருந்தான்.

1985ம் ஆண்டு திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தை காரணமாக சிங்கள அரசினால் அறிவிக்கப்பட்டிருந்த போர் நிறுத்த வேளையில் பண்டாரிக்குளம் என்னும் இடத்தில் சக தோழனான பாலாவுடன் சென்று கொண்டிருந்தபோது பதுங்கியிருந்த சிங்கள இராணுவத்தால் தாக்கப்பட்டு பாலா அவ்விடத்திலேயே வீரமரணமடைய, மேஜர்.குமுதன் காயங்களுடன் தப்பிக்கொண்டான்.

இதே போன்றே 1989ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் தேதி, இந்திய அரசினால் அறிவிக்கப்பட்டிருந்த யுத்த நிறுத்த வேளையில் முல்லைத்தீவுக்குச் சென்றிருந்தபோது இந்திய ஆக்கிரமிப்பாளர்களால் வைக்கப்பட்ட மிதிவெடியில் மேஜர்.குமுதன் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டான்.

தனது அமைதியான குணத்தாலும், நிதானமான பேச்சுக்களாலும் மக்களின் மனதில் இடம் பிடித்துக்கொண்ட மேஜர் குமுதன் சகோதரர்களாலும் சரி மக்களாலும் சரி குமுதண்ணன் என்றே அன்பாக அழைக்கப்பட்டான். இன்று காடுகளையும், வயல்களையும், குளங்களையும் தாண்டிச் செல்லும் போதெல்லாம் எம்மையறியாமலே குமுதண்ணனின் நினைவு எம் மனதில் நிழலாடுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



# லெப். கேணல் ராதா

1985ம் ஆண்டு பங்குனி-சித்திரை காலகட்டம் மன்னார் மண்ணில் வீரவேங்கை ராதாவின் (ஹரிச்சந்திரா) காலடிபடுகிறது. அப்போது மன்னாரில் எமக்கு ஒரே ஒரு முகாம் மட்டுமே இருந்தது. ஸ்ரீலங்கா இராணுவத்தின் கெடுபிடிகள் கட்டவிழ்த்து விடப்பட்ட நேரம். வீரத்துக்கும், விவேகத்திற்கும் விக்டர் அண்ணன் எமக்கு அர்த்தம் சொல்லித் தந்த காலம்.

ராதா வந்திற்று, ராதா இனி கவனிக்கும்-விக்டர் அண்ணா சுமை குறைந்தவராகப் பேசினார். ராதா அண்ணன் இடது கைக்காரர். ராதா அண்ணன் தலை சீவ மாட்டார். ஆம் இடது கைதான் ராதா அண்ணனுக்கு சீப்பு, கூடவே மழலைச் சிரிப்பும். 5ஆவது பயிற்சி முகாம் நடாத்தியவர். நல்ல கெட்டிக்காரர். ஆரம்பத்தில் ராதா அண்ணனைப் பற்றி அறிந்து கொண்டது இவைதான். போராட்ட பயணம் தொடர்கிறது. மன்னார் பொலிஸ் நிலையம் தாக்குவதற்கு திட்டமிடப்படுகிறது. ஐசே! ஐசே! என்றவாறு ஒவ்வொரு தோழனையும் தோள்தட்டி வளர்ப்பவர் ராதா அண்ணன். நுட்பமான பேச்சு, நுட்பமான வேலை, வெற்றிகரமான மன்னார் பொலிஸ் நிலைய தாக்குதல். அன்று இரவு லண்டன் பி.பி.சி செய்தி கரந்தடிப்படையினர் துல்லியமாக திட்டமிட்டு, நுட்பமாகத் தாக்கியுள்ளனர் என்று அந்த தாக்குதலை வர்ணித்தது. விக்டர் அண்ணன் தலைமையேற்ற தாக்குதலில் ராதா அண்ணனின் முதல் பங்களிப்பு சிறப்பாக அமைந்திருந்தது. மன்னார்ப் புலிகளின் போராட்ட சாதனைக்கு வித்திட்டதாகவும் அது அமைந்திருந்தது.

எமது ஒப்பற்ற தலைவரின் நன்மதிப்பைப் பெற்ற ராதா அண்ணன் குழந்தை உள்ளம் படைத்தவர். ஆழமான அரசியல் அறிவுடன் இராணுவ தொழில் நுட்பங்களிலும் கை தேர்ந்தவர். ஆங்கில மொழியில் அழகாகப் பேசுவார். சிங்கள மொழியும் சரளமாக பேசக்கூடியவர். தனது அபார திறமையினால் மூத்த உறுப்பினர்களுக்கு இணையாக நின்றவர். தலைவர் மீது மிகுந்த பற்றும், பாசமும் கொண்டவர். இயக்கத்தில் தோழர்களிடத்தில் உயிரையே வைத்திருந்தவர். தமிழ் மக்கள் படுகின்ற வேதனை களை ஸ்ரீலங்கா இராணு வத்தினரின் காட்டுமிரான





படிப்பகம்

www.padippakam.com

டித் தனங்களை கண்டு கண் சிவந்து நிற்பார். உயிருடன் இருக்கும் வரை எம் இனத்தின் விடுதலைக்காக போராடுவோம். மக்களுக்காக மரணிப்பதை நாம் மகிழ்ச்யோடு ஏற்போம். கண்டபடி நடமாடும் இவனுக்கு (ஸ்ரீலங்கா இராணுவம்) நல்ல அடி போடனும் ஐசே. என்றெல்லாம் சமயத்தில் தத்துவம் பேசுவார். வாய்ச் சொல்லில் இருந்த வீரம் ராதா அண்ணன் வாழ்க்கையிலும் இருந்தது.

எமது ஒரு தோழன் இராணுவத்தால் சுடப்பட்டு விட்டான் என்றால் ராதா அண்ணன் பொறுக்கமாட்டார். மறு நாள் பாரிய குண்டு வெடிப்பு ஜீப் ஒன்று தூள், அல்லது இராணுவடிரக் ஒன்று சிதைக்கப்பட்டது என்ற சேதி எம் காதுகளில் தேனாகப் பாயும். நிமிர்ந்து பார்த்தால் அங்கு ராதா அண்ணன் வெற்றிக்களிப்பில் நிற்பார்.

எமக்கு வீரமூட்டி, தன்னம்பிக்கையூட்டி, அறிவூட்டிவளர்த்த ராதா அண்ணன் தலைவன் அழைப்பை ஏற்று மன்னாரிலிருந்து செல்கின்றாராம் என்ற சேதி எமக்கிடையில் பரபரப்பாக பேசப்படுகிறது. என்ன ராதா அண்ணன் மன்னாரை விட்டு போறிங்களாம் என்று கேட்ட தோழர்களிடம் இல்லை ஐசே அண்ணன் (தலைவர்) கூப்பிடுகிறார் நான் சீக்கிரம் திரும்பி வருவேன் என்று கூறினார். துக்கம் கனத்த குரல், கண்கள் குளமாகின்றது. ராதா அண்ணனுக்கு ஒரு பழக்கம் யாரையாவது தண்டித்தால் அல்லது யாராவது வீரமரணமடைய நேரிட்டால் தேம்பி தேம்பி அழுவார். சுற்றிவர நின்று பார்க்கிற எம்மை சமாளிப்பதற்காக தம்மை சுதாகரித்துக் கொள்ள பின்னர் நாம் கிண்டல் செய்ய தந்தையாக தாயாக அண்ணனாக தம்பியாக எதுவாக ஒப்பிட்டாலும் ராதா அண்ணன் பொருத்தமானவர்.

12.10.86 அன்று அடம்பனில் நடைபெற்ற மோதலில் சாதனைபடைத்து, சரித்திரமாகிவிட்ட விக்டர் அண்ணனின் வீரமரண செய்தி கேட்டு மன்னார் மக்கள் கண்ணீர் சிந்தியவேளை, மன்னார் புலிகள் தேற்றுவார் அற்று நின்ற வேளை கண்ணீர் துடைத்து கடமை ஏற்க மீண்டும் ராதா அண்ணன் மன்னார் வருகிறார். வேதனையிலும் ஓர் நிம்மதி சேர்ந்த நெஞ்சங்களுக்கு வலுவூட்ட ராதா அண்ணன் வந்துவிட்டார்.

27.10.86ல் மீண்டும் ஸ்ரீலங்கா படையெடுப்பு ஆத்திரம் மிகுந்த யுத்தம் குறுகிய நேர புயல்பாய்ச்சல், பின்னர் பதுங்கிக் கொண்டோம். வெட்டி வீழ்த்த வந்தவன் வெறுங்கையுடன் திரும்பிச் செல்கிறான். ராதா அண்ணனின் யுத்த தந்திரத்திற்கு ஒரு ஜே. ஸ்ரீலங்கா இராணுவத்தை உடல், உள ரீதியில் பயமுறுத்தி வைத்திருந்தார் ராதா அண்ணன். மிகவும் புத்திசாலித்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாரிய வெற்றிகள் ஈட்டித்தந்தார் ராதா அண்ணன்.

ஸ்ரீலங்கா இராணுவம் புலிகளை அழிக்க எமது மண்ணை ஆக்கிரமிக்க பல வழிகளை கையாண்டது. அதில் ஒன்று, பவள். தென்னாபிரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டதாம். கண்ணிவெடிக்கும் உடைய மாட்டாதாம். இது ஸ்ரீலங்கா இராணுவத்தின் மிரட்டலும், ஒப்பாரியும். அன்று தைப்பொங்கல் திருவிழா எமது மக்கள் வீட்டு முற்றத்தில் பொங்கல் படைக்கின்ற நேரம் ஓர் சத்தம். தென்னாபிரிக்காபவல் சுக்குநூறு. மக்கள் வெள்ளம் படையெடுத்தது. நல்ல அடி, சம்பல் அடி ராதா என்றால் ராதாதான். மக்கள் மனம்விட்டு பாராட்டுகின்றனர். புலிகளின் மற்றுமொரு சாதனை.

இதே மண்ணிலேதான் 84ம் ஆண்டு டிசம்பர் 4ம் திகதி 200ற்கு மேற்பட்ட அப்பாவி மக்களை கண்மூடித்தனமாக சுட்டுக்கொன்றனர். இவர்களுக்கு இது வேணும் இன்னமும் வேணும். மக்கள் மனதில் ஓர் துணிவு, நம்பிக்கை பிறக்கிறது. ஐயா, ராஜி, அசோக், நோயல் இவர்களை ஒவ்வொருவராக அழைத்து மகிழ்ச்சிகடலில் மிதக்கிறார் ராதா அண்ணன். ஐசே ராஜீ பார்த்தீரா விளையாட்டை. அசோக் கவனம் ஐசே! நோயல் நீர் மன்னாரில் முள்ளந்தண்டு என்றெல்லாம் ஒவ்வொருவர் முக்கியத்துவத்தையும் உணர்ந்து, உரமூட்டி செயற்படுவார்.

1987 மாசி 7ம் திகதி ஸ்ரீலங்கா இராணுவம் மீண்டும் பாரிய சுற்றிவளைப்பை மேற்கொண்டு



படிப்பகம்

படையெடுத்தது. பலத்த மோதலில் நோயல் வீரமரணமடைந்த கசப்பான செய்தியை ராதா அண்ணன் மனவருத்தத்துடன் வோக்கியில் அறிவிக்கிறார். எதிரியில் இராணுவம் பலம் கொண்டு தாக்கும்போது கெரில்லா படை சமயத்தில் பின்வாங்கி அவதானிப்பது கெரில்லா யுத்தநடை முறையில் ஒன்று. அது அன்று எம்மால் மேற்கொள்ளப்பட்டதும் எமக்கு நிரந்தரமான, உறுதியான தளம் ஒன்று தேவை. எம்மைப் பாதுகாக்க, பலப்படுத்த உடனடி ஏற்பாடுகளை மேற்கொண்டு வேலைகள் நடைபெற்றன.

தமிழீழ பிரதேசங்களில் சகல மாவட்டங்களிலும் இது போன்ற ஸ்ரீலங்கா படையின் பாரிய யுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. அப்போது யாழ் தளபதி கிட்டண்ணாவிடமிருந்து தகவல் வந்தது. ராதா அண்ணன் தலைமையில் யாழ்ப்பாணம் நோக்கி புறப்படுகிறோம். அங்கும் இராணுவத்தினரின் சுற்றிவளைப்புக்கான ஆயத்தவேலை நடைபெற்றது. மறுகணம் யாழ் பொலிஸ் விடுதி தாக்கப்படுகிறது. 8 ஸ்ரீலங்கா சிங்கள பொலிசார் கைதுசெய்யப்படுகின்றனர். கிட்டண்ணாவும், ராதா அண்ணாவும் சேர்ந்து நடாத்திய சாதனை. இதன்பின்னர் துரோகி ஒருவனது கோழைச் செயலால் தளபதி கிட்டண்ணா ஒரு காலை இழக்கின்றார்.

ராதா அண்ணன் யாழ் மாவட்ட தளபதியாக தலைவரால் நியமிக்கப்படுகிறார். தொடர்ந்து காங்கேசன்துறை காபர் வியூ இராணுவமுகாம் தகர்க்கப்படுகிறது. மயிலியதனை இராணுவமுகாம், குரும்பசிட்டி இராணுவமுகாம் தாக்கப்பட்டு ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு பல இராணுவம் கொன்று குவிக்கப்பட்டது. நிலைதடுமாறிய ஸ்ரீலங்கா அரசும், அதன் கூலிப்படைகளும் யாழ் மண்ணை யுத்த பூமியாக்கினர்.

20.05.87 காலை ஆகாய விமானத்தாக்குதல், பீரங்கிதாக்குதல், ஷெல் வீச்சுகள் சகிதம் பெரும் படையுடன் புறப்பட்ட இராணுவத்தை பல முனைகளிலும் எமது வீரர்கள் எதிர்த்து தாக்கினர். பலத்த இழப்புக்களுடன் இராணுவம் பின்வாங்கி முகாமினுள் முடங்கியது. அன்று தமிழ் மண்கண்ணீரில் மூழ்கியது. காரணம் எங்கள் அன்பான ராதா அண்ணா எம் நெஞ்சில் தீபமாகி விட்டார்.




ஓ எம் தோழா உன் அன்பான நடத்தையால் உனக்கு அன்பாக நாமிட்ட பெயர் அன்பு. உன்னை இழந்தோம். எம் அன்பை இழந்தோம்.

அன்பு என்ற பெயரைக் கேட்டு சிலர் உன்னை சிறுவன் என்றோ, மிருதுவான தோற்றமுடையவன் என்றோ நினைக்கலாம். 6 அடிக்கும் கூடிய உனது உயர்ந்த தோற்றத்தையும், தினவெடுத்த திரண்ட தோள்களையும் எம்மால் என்றும் மறக்கமுடியாது.

உன்னால் பயிற்றப்பட்ட எம் இளைஞர்கள் நீ இறந்த செய்தி

# வீரவேங்கை அன்பு



கேட்டு உன்மீது கொண்ட அன்பால் அவர்கள் அடைந்த துயர் சொல்லமுடியாதது. உன் வீரம் செறிந்த தியாக வரலாறு ஒவ்வொரு மக்களும் அறியவேண்டியது.

யாழ்.பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது குருநகர் இராணுவ முகாமில் இருந்து பொலிஸ் நிலையத்திற்கு உதவி கிடைக்காமல் தடைசெய்யும் பணியை செவ்வனே செய்து முடித்தவன். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கு முன்பாகவே குருநகர் முகாமுக்கு மிக அண்மையில் சென்று கண்ணிவெடியை நிலைப்படுத்த வேண்டும். இது சரிவர நடந்தேறினால் மட்டுமே பொலிஸ் நிலையத் தாக்குதல் நடைபெற முடியும். இச்செயல் இடையில் குழம்புமானால் பொலிஸ் நிலையத்தாக்குதல் மட்டுமல்ல அதை நோக்கி அசைந்து கொண்டிருக்கும் எம் ஏனைய தோழர்கள் கூட உயிராபத்தை எதிர்நோக்கும் இக்கட்டான நிலைமை.

www.padippakam.com

இராணுவத்தினர் இரவு ரோந்துக்கு புறப்படுமுன்னர் கண்ணிவெடியை நிலைப்படுத்தவும் வேண்டும். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கும்வரை அமைதியைப் பேண வேண்டிய பொறுப்பான வேலைக்காக வெடிமருந்து (Explosive) தேர்ச்சிபெற்ற அன்பு நியமிக்கப்பட்டான்.

வெற்றிகரமாக கண்ணிவெடிகளை நிலைப்படுத்திய அன்பு G3 A3 என்ற தானியங்கி ரைபிளை தாங்கி பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கியதும், முகாமை விட்டுப் புறப்பட்ட இராணுவத்தினர் மீது G3 A3ஆல் சரமாரியாக இந்தா இந்தா என்று சுட்டு அவர்களை விரட்டிய அழகை இப்போதும் தோழர்கள் நினைவுகூர்ந்து கண்ணீர் சொரிகின்றனர்.

யாழ்.பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கி எமது தோழர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறும் வரை மிகப் பலம் பொருந்திய குருநகர் முகாமில் இருந்து எந்த ஒரு கவசவாகனமோ, அல்லது இராணுவப் பிரிவையோ வெளியேறாமல் தடுத்து எம் வெற்றிக்கு உறுதி அளித்தவன் அன்பு.
எம்மோடு தங்கி இருக்கும்போது ஒரு நாள் அன்பு தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை மெதுவாக வெளியே எடுத்தான். ஒரு நிழற்படம் கையிலிருந்து நழுவிக் கீழே நிலத்தில் வீழ்ந்தது. அன்பு அதை எடுத்தான். அவன் நெஞ்சு படபடத்தது. படத்திலிருந்து அவனை நோக்கியது பழக்கமான, அழகிய அவனின் காதலியின் உருவம். சாறி அணிந்திருந்தாள். அது அவளுக்கு மிகவும் இசைந்திருந்தது. ஒடிசலான கொடி இடைஉடைய அந்த அழகிய பெண்ணின் ஒளிவீசும் பெரிய வட்ட விழிகள் அன்பை ஊடுருவும் நோக்குடன் பார்த்துக் கொண்டிருந்தன.

அன்பு அந்த விழிகளை நெடுநேரம் நோக்கியவாறு இருந்தான். அவன் உள்ளம் இனந்தெரியாத இனிய சோகத்தால் நிறைந்தது. விருப்பமான சோகப்பாட்டு ஒன்று மாலை வேளையில் தூரத்திலிருந்து கேட்கும்போது உணர்வது போன்ற சோகம்அது. நிழற்படத்தின் மறுபக்கம் அன்பே மறந்து விடாதே என்று எழுதப்பட்டு இருந்தது. அதனுடன் இருந்த கடிதத்தை மீண்டும் படித்தான். கணக்கிட முடியாத தடவைகள் மீண்டும் மீண்டும் படித்ததால் கடிதம் கசங்கி மடிப்புகளில் விடத் தொடங்கி இருந்தது. நிழற்படத்தை மீண்டும் பார்த்தான்.

எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாயா? எதிர்பார் எதிர்பார்! காதலிக்கிறாயா? காதலி காதலி! இனியவளே, தமிழீழம் கிடைக்கட்டும். நாம் இன்பமாக வாழலாம் என்று அவன் முணுமுணுத்தது எம் காதுகளுக்கு கேட்டதோ அல்லது நாம் உணர்ந்து கொண்டோமோ தெரியவில்லை.

நாம் தாக்குதலுக்குச் செல்லும் பொழுதெல்லாம் ரொக்கட் லோஞ்சரை அன்புதான் எடுப்பான். அதை தூக்கிச் செல்லும் உடல் வலுவும் சிறந்த பயிற்சியும் அன்புவிடம் இருந்ததால் அவனை நாம் டேய் லோஞ்சா என்று அன்பாக அழைத்தோம்.

அன்று காலை நாம் எல்லோருமாக காலை உணவருந்திக் கொண்டிருக்கின்றோம். வெளியில் இருந்து வந்த அன்புதானும் எம்முடன் சாப்பிடுவதற்காக பாயில் இருந்து சாப்பிடத் தொடங்குகின்றான். அவனுடைய பார்சலில் ஒரு வடை இருந்ததைக் கண்ட நண்பன் அதை பாய்ந்து எடுத்தான். அன்பான பறிபாடு, அன்பான ஒப்பந்தம், அன்பான பங்கிடல் மூலம் வடையை பங்கிட்டுக் கொண்டு மிக சந்தோசமாக குதூகலமாக உணவருந்திக் கொண்டிருந்தார்கள். கீழே பாயிலிருந்து சாப்பிடுவதால்தான் இடுப்பில்அணிந்திருந்த கைக்குண்டை அன்பு வெளியில் எடுக்கும்போது கைக்குண்டின் தடை நீக்கப்பட்டுவிட்டது. அன்புவின் முகம் மாறுகின்றது. கைக்குண்டை உடனே வெளியே எறியவேண்டும். வெளியிலும் தோழர்கள் அமர்ந்திருந்தனர். உடனே தன்னுடைய வயிற்றோடு குண்டை அணைத்துக்கொண்டான். வெடியதிர்வுகளோ, அல்லது குண்டுச் சிதறல்களோ மற்றைய



படிப்பகம்

www.padippakam.com

தோழர்களை பாதிக்கவிடாமல் அவை அனைத்தையும் தன் உடலால் ஏற்றுக்கொண்டான்.

"டமார்" என்ற பெரிய சத்தம். புகைமண்டலம். நாம் தூக்கி வீசப்பட்டோம். புகை விலகியபோது ஓ... கோரம்... அறை எங்கும் இரத்த வெள்ளம். அறைகளில் எல்லாம் சதைத் துண்டங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கைக்குண்டால் துண்டாடப்பட்ட உடலின் பாகங்கள் மூன்று துண்டங்களாக்கப்பட்ட உடல்... எம்மை எல்லாம் காப்பதற்காக தன்னுடைய உடலால் வெடிகுண்டைத் தாங்கிய அன்பு, துண்டுகளாகக் காணப்பட்டான்.

எம்மோடு பேசிக்கொண்டிருந்தவன், சாப்பிட்டுக் கொண்டிருந்தவன், திடீரென்று துண்டுகளாகக் கிடக்கும்போது எப்படித்தான் எம்மால் ஜீரணித்துக் கொள்ளமுடியும்.


உடலை அகற்றும் போது அன்புவின் டயறியின் பாகங்கள் இரத்தத்தில் தோய்ந்து காணப்பட்டது.

அதில் ஒரு பக்கத்தில் மரணம் ஒருவனை அழிப்பதில்லை என்ற வசனம் காணப்பட்டது. ஆம் அன்புவின் மரணம், தியாகம் இன்னும் எத்தனையோ அன்புக்களை உருவாக்கியிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com





# லெப்டினன் கேணல் நாதன்

லாச்சப்பலில் இரண்டு தமிழர்களைச் சுட்டு விட்டார்கள். பொலிஸ்காரர் ரோட்டுக்களை மூடிவிட்டனர். வெளியில் போன கஜன் இன்னும் வந்து சேரவில்லை. மோபைல் ரெலிபோனும் வேலை செய்யவில்லை. 26.10.96 அன்று இரவு 11.00 மணியளவில் கஜனைத் தேடி தொடர்பு கொண்டபோது ஈழமுரசு அலுவலகத்திலிருந்து கிடைத்த தகவல்கள் இவை.

நெஞ்சினில் சட்டென்று ஒரு பாரம். ஒரு கணம் யோசித்தேன். கஜனைத் தேடி ஆபத்து வந்திருக்குமோ என்று ஒரு சிறு எண்ணம் இருப்பினும் எல்லாவற்றையும் நல்லபடியாகவே சிந்திக்கும் மனது அப்படி ஒன்றும் இருக்காது என்று கூற என்னை நானே தேற்றிக் கொண்டேன்.
வீடு நோக்கிச் செல்லும்போது. பாரிசில் இரு தமிழர்களை நோக்கித் துப்பாக்கிச் சூடாம் என்று நண்பர்களிடமும் எக்காத தொடர்புமே அற்றவர்களுக்கும் நடந்த சம்பவத்தினைப் புதினமாகக் கூறிக்கொண்டேன். ஆனால் அப்போதும் நெஞ்சில் ஒருவித சலனம் இருக்கத்தான் செய்தது.

வீடு சென்ற கையுடன் தொலைபேசி மணி ஒலித்தது. பாரிசில் இருந்து வந்த அழைப்புத்தான் அது. நாதனின் மோபைல் உம் வேலை செய்யவில்லைஎன்ற தகவல் அவ்வழைப்பின் மூலம் கிடைத்தது.



படிப்பகம்

www.padippakam.com

அப்படியே அதிர்ந்தபடி இருந்துவிட்டேன். இரண்டு பேரினது மோபைல் தொலைபேசிகளும் ஒரேயடியாக நீண்ட நேரம் வேலை செய்யாது இருப்பதெண்டால்...

லாச்சப்பலில் இரண்டு தமிழர்களைச் சுட்டுவிட்டார்கள் என்ற கூற்று திரும்பித் திரும்பி மனதினில் ஒலிக்கத் தொடங்கியது.

சந்தேகப்படுவதனைத் தவிர வேறு வழியில்லை. சந்தேகப்பட மனதும் இடம் தரவில்லை. இரண்டு பேரில் ஒருவர் இறந்து விட்டாராம். ஒருவருக்குக் காயமாம் என்ற தகவலும் கிடைத்தது. எவர் இறந்தார்? எவர் காயமடைந்துள்ளார்? இருவரில் எவராக இருந்தாலும் சோகம் நெஞ்சை அடைத்தது. எனினும் எதையும் நல்லபடியாக நினைக்கும் மனது அப்படி ஒண்டும் இராது என்றே சொல்லிக் கொண்டது. 27.10.96 அதிகாலை 4 மணி வரை விழித்திருந்தபடி பதிலை எதிர்பார்த்தபடி காத்திருந்தேன். காலை 9.30 மணி வரை பதில் இல்லை. அதன்பின் வந்த தொலைபேசி அழைப்பு அந்தச் சோகத்தை உறுதிப்படுத்தியது.

எங்கடை ஆக்களுக்குத்தான் நடந்திருக்குது என்ற தகவல் வர அதிர்ச்சியுடன் அதேவேளை ஒருவித எதிர்பார்ப்புடன் தப்பதியது ஆரு என்று கேட்டேன். இரண்டு பேரும் போயிட்டனம் எதுவுமே பேசவில்லை. தொலைபேசியினை வைத்துவிட்டேன்.

போராட்டத்தோடு அவனுக்குள்ள தொடர்பு நீண்ட காலமானது. 1982ம் ஆண்டிலிருந்தே அவனுக்கு போராட்டத்துடன் தொடர்பு இருந்தது. அவனை இனங்கண்டு போராட்டத்துடன் முதலில் இணைத்தவர் பொட்டம்மான். 1983லிருந்து பசீர் காக்காவின் உதவியாளனாக யாழ். மண்ணின் மூலை முடுக்கெல்லாம் திரிந்து போராட்டத்துடன் மக்களை இணைப்பதில் அயராது உழைத்தவன். எவ்வளவு வேலைகள் இருப்பினும் சிரித்த முகத்துடன் களைப்புறாது செய்வது அவனது தனிச்சிறப்பு. எப்போதும் பறந்தாடி முழு நேரமாகவே இயக்கத்துக்கு வேலை செய்து கொண்டிருந்தான். 1984 வரை தொடர்ச்சியாக இயக்கத்துடன்தான் வேலை.

1984ல் குடும்ப நிலை காரணமாக குடும்பப் பொறுப்புக் காரணமாக வெளிநாடு செல்லவேண்டிய அழுத்தம் ஏற்பட்டபோது அவனிடம் மனக்கவலை இருந்தது. இருப்பினும், வெளிநாடு வந்து சேர்ந்தான். வந்தவனால் மூன்று மாதம்கூட குடும்பத்திற்காக உழைக்க முடியவில்லை. அவனது மனச்சாட்சி அவனை வதைக்கத் தொடங்கியது. பகுதி நேரமாக இயக்கத்திற்கு வேலை செய்வதன் மூலம் மனதை உறுத்தும் மனச்சாட்சியுடன் அவனால் சமரசம் செய்து கொள்ள முடியவில்லை. முழு நேரமாக இயக்கத்திற்கு வேலை செய்வதென முடிவு செய்து கொண்டான். குடும்பம் நாடு இரண்டையும் ஒரே நேரத்தில கவனிக்க முற்பட்டால் ஒன்றையுமே முழுமையாகச் செய்யமுடியாது என்ற எண்ணம் தலைதூக்க குடும்பத்தினைக் கைவிட்டான். நாட்டுக்காகச் செயற்பட முன்வந்தான். திருமணமாகாத 33 வயதான அக்காவின் முகம் அடிக்கடி நினைவில் வந்தபோதும் நாட்டுக்காக உழைப்பதனைக் குறைத்து அக்காவின் சீதனத்திற்காக உழைக்க அவனால் முடியவில்லை.

பாரிசில் முழு நேர உறுப்பினனாக செயற்படத் தொடங்கிய பின்னர் தனது கடின உழைப்பின் மூலம் தனது திறமையான செயற்பாடுகள் மூலம் போராட்டத்திற்கான சர்வதேச வலைப்பின்னலை வளர்த்தெடுப்பதற்கு துணை நின்றான். நீண்ட காலமாக போராட்ட வேலைகளினூடாக அவன் பெற்றிருந்த பட்டறிவு பல்கலைக்கழகங்களிலேயே பெற்ற கல்வியாளர்களைப் புறந்தள்ளிவிடும் அளவுக்கு நுணுக்கமாக உலகினைப் பார்க்க அவனுக்குக் கற்றுத் தந்திருந்தது. நுட்பமாக செயற்பட அவனுக்குத் துணை புரிந்தது.

நாதன் இயக்கத்திற்கும் போராட்டத்திற்கும் சர்வதேச அளவில் செய்த பணிகளைப் பட்டியல்



படிப்பகம்

www.padippakam.com

போட முற்பட்டால் அதற்குத் தனிப் புத்தகமே தேவைப்படும். ஒன்றிரண்டு அல்ல... பன்னிரண்டு ஆண்டுகள் அவன் போராட்டத்திற்காக வெளிநாடுகளில் உழைத்திருக்கிறான். அந்த உழைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச நிதிப் பொறுப்பாளராக இருந்து அவன் ஆற்றிய பணிகள்... இயக்கத்திற்கு நிதிப்பலம் தேட வேண்டும் என்பதில் அவன் காட்டிய அக்கறை... ஒவ்வொரு அலகு பணத்தையும் மிகக் கவனமாகச் செலவு செய்ய வேண்டும் என்பதில் அவன் கொண்டிருந்த அவதானம்... நாட்டிலே மக்கள் படும் வேதனையினை எண்ணி அவன் துடிக்கும் துடிப்பு... மக்கள் விடுதலை அடைய வேண்டும் என்பதில் அவனுக்கிருந்த விருப்பு... தலைவர் மீது அவனுக்கிருந்த மதிப்பு... நண்பர்களுடன் அவன் கொண்ட நெருக்கம்...

ஒரு நல்ல மனிதனின் அருமை அவன் இருக்கும்போதுவிட இல்லாதபோதுதான் தெரியும் என்பார்கள். இந்த நண்பன் இல்லாமல் போய்விட்டான் என்பதனை இன்றுவரை நம்பமுடியவில்லை.

அவனது குரல் இனிக் கேட்காது என்பதனைத் தாங்க முடியவில்லை... எப்படித்தான் எம்மை நாமே தேற்றப்போகிறோமோ?



படிப்பகம்

www.padippakam.com



# கப்டன் கஜன்



வெளிநாட்டுக்கு வந்த பின்னரே இவன் இயக்கத்துடன் இணைந்து செயற்படத் தொடங்கியவன். 1991ம் ஆண்டில் இவனை முதன்முதலில் சந்தித்தேன். அப்போது முதல் மரணிக்கும் வரை அவனிடம் இருந்த வளர்ச்சியினை கண்கூடாகப் பார்க்க முடிந்தது.

இவன் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப் பணியக உறுப்பினராக நீண்ட காலமாகப் பணியாற்றி வந்தவன். கவிதை, சிறுகதை போன்றவை எழுதும் ஆர்வம் இவனிடம் இருந்தது. ஆகா என்று சொல்ல முடியாவிடினும் இவனது கவிதைகளில் தரம் இருந்தது. கலை இலக்கியம் தொடர்பான ஆழமான பார்வை இருந்தது. தான் நினைப்பதை அது நல்லதோ கெட்டதோ ஒழிவு மறைவு இன்றி நேரிலே எடுத்துக் கூறும் சுபாவம் அவனிடம் இருந்தது. எவரிடமும் தனது கருத்தினை எடுத்துச் சொல்லத் தயங்காத துணிச்சல் இருந்தது. இந்தக் குணாம்சங்கள் இவனுக்குத் தனித்துவமான ஆளுமையையும் கொடுத்தது.

பிரெஞ்சுப் பணியகத்தின் ஊடாக செயற்பட்ட கஜன் கிட்டண்ணா லண்டனுக்கு வந்தபோது அவருடன் நீண்டகாலம் இணைந்து இயங்கிய

www.padippakam.com

வன். 1993 தை மாதம் 16ம் திகதி எம்மை விட்டுப் பிரிவதற்கு முன் கிட்டண்ணா மேற்கொண்ட தலைமறைவு வாழ்க்கையின் போதும் சில காலம் அவருடன் கூட இருந்தவன். கிட்டண்ணாவிடம் இருந்து அவன் கற்றுக்கொண்டது ஏராளம். கிட்டண்ணாவின் ஆளுமையின் ஒரு பகுதியினை அவரிடம் அவன் உள்வாங்கிக் கொண்டிருந்தான்.

1995ம் ஆண்டு தை மாதம் ஈழமுரசு பத்திரிகையினை ஆரம்பித்து, அதன் ஆசிரியராக இருந்து அதனை வழிநடத்தத் தொடங்கியபின்தான் கஜனின் கடின உழைப்பின் தன்மையினையும் அவனது ஆளுமையின் கூர்மையினையும் நாம் முழுமையாக உணர்ந்து கொண்டோம். கஜனை அறியாதவர்கள்கூட ஆசைத்தம்பி எனும் எழுத்தாளரை நிச்சயம் அறிந்திருப்பர். குறைந்தது 60 வயது ஆசைத்தம்பிக்கு இருக்கும் எனக் கற்பனை கண்டிருப்போமா? அவ்வளவுக்கு அந்த எழுத்துக்களில் மண்வாசம் வீசும். ஆனால் 30 வயதும் நிரம்பாத அந்தக் கை தான் இதனை எழுதியிருக்கிறதோ என்று நம்புவதே கடினமாக இருக்கும்.

பத்திரிகை ஆசிரியராக மட்டுமல்ல... பத்திரிகை விநியோகிப்பவனாக... விளம்பரம் எடுப்பவனாக... கணக்குகள் பராமரிப்பவனாக... அலுவலகம் திறப்பவனாக... ஈழமுரசு என்றால் கஜன்... கஜன்... என்றால் ஈழமுரசு என்று கூறுமளவுக்கு உழைத்தான்.

தனது இறுதிக் காலங்களில், தனது இறப்பை முன்னுணர்ந்தோ என்னவோ, தான் இல்லாமல் பத்திரிகை வெளிவருவதற்கான தயாரிப்புக்களைச் செய்திருந்தான். திங்கட்கிழமை இரவுதான் பத்திரிகை தயாராகி முடியும். இறுதிக் காலங்களில் திங்கட்கிழமை இரவுகளில் பத்திரிகை அலுவலகத்தில் தன் தேவையைத் தவிர்த்தான். நான் இல்லாமல் பத்திரிகை வரவேணும். நான் போராட்டத்துக்காக வேலை செய்யப்போறன் என்றும் கூறியிருக்கிறான்.

தான் இல்லாவிடினும் பத்திரிகை வரவேணும் என கஜன் கொண்டிருந்த அக்கறை ஈழமுரசின் பணி தொடரும் என்பதனை இன்று வெளிப்படுத்த உறுதுணையாக இருந்தது.

பத்திரிகைத் துறையில் சாதனைகள் பல நிகழ்த்தியிருக்கக் கூடிய அந்த ஆளுமையானவன் நம்மிடையே இப்போது இல்லை என்பதனையும் நம்ப முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



மாவீரர்களது அற்புதமான
இலட்சிய வாழ்க்கை
அவர்களது தியாகங்கள்,
அவர்கள் அனுபவித்த
துன்ப துயரங்கள்,
ஏக்கங்கள்,
அவர்கள் கண்ட கனவுகள்
இவை எல்லாவற்றினதும்
ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே
எமது போராட்ட வரலாறு
முன்னேறிச் செல்கின்றது.
எமது வீர சுதந்திர வரலாறு
இந்த மாவீரர்களின் இரத்தத்தால்,
வியர்வையால், கண்ணீரால் எழுதப்பட்டது.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்